பக்கங்கள்: 14

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 மாசி 06 ஞாயிற்றுக்கிழமை 18.02.2024 கதிர் 103

# கச்சதீவு திருவிழாவை புறக்கணிக்க தமிழ்நாட்டு மீனவர்கள் தீர்மானம்

## 3 மீனவர்களுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டதற்கு எதிர்ப்பு

கச்சதீவு வருடாந்த திருவிழாவைபுறக்கணிப்பதற்குதமிழ்நாடு மீனவர்கள்தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளதோடு, தொடர் போராட்டங்களை முன்னெடுக்கப்போவதாகவும் அறிவித்துள்ளனர்.

இது தொடர்பில், இராமேஸ்வரம் விசைப்படகு மீனவ சங்க செயலாளர் எமரால்ட் தெரிவித்துள்ளதாவது:

இராமேஸ்வரம் மீன் பிடி துறைமுகத்திலிருந்து பெப்ரவரி 3 மீன்பிடிக்கச் சென்று நான்காம் திகதி அதிகாலை எல்லை தாண்டிமீன்பிடித்ததாகஇரண்டு படகுகளையும் அதிலிருந்து 23 மீனவர்களை இலங்கை ☞2

## இனி இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சியின் பிணக்கு இன்னும் இன்னும் சிக்கலான நிலைக்கே செல்லும் என்று தெரிகின்றது. போகிற போக்கில் கட்சியின் தலைவர் தெரிவையேகூட மீண்டும் நடத்தவேண்டிய சட்டச் சிக்கல் ஏற்படக்கூடும் என்று நேற்றுச் சுட்டிக்காட்டியிருந்தேன். அதை உறுதிப்படுத்தும் வகையில் கட்சிக்கெதிராக மற்றொரு வழக்கையும் யாழ்ப்பாணத்தில் தாக்கல் செய்வதற்கான மும்முரம் காணப்படுவதாக அறியக்கிடைத்தது.

யாழ்ப்பாணத்தில் ஏற்கனவே கட்சிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்திருந்த தரப்புகளே இந்த வழக்கையும்தாக்கல்செய்வதற்கான முனைப்பில் இருக்கின்றன என்று தெரிகின்றது. எனினும் ☞2

## போராட்டத்திற்கு ஆதரவு தருமாறு கோரிக்கை

போரின்போது காணாமல் ஆக்கப்பட்ட பிள்ளைகளுக்கு சர்வதேச நீதிவேண்டிபெப்ரவரி20கிளிநொச்சியில் நடத்தப்படவுள்ள போராட்டத்திற்கு அனைவரையும்ஆதரவுவழங்குமாறு வடக்கு கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்க தலைவி யோகராசா கனகரஞ்சினி ☞8

## கெஹலிய ரம்புக்வெல தொடர்ந்து சிறை வைத்தியசாலையிலேயே

முன்னாள் சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்லவுக்கு மேலதிக மருத்துவ சிகிச்சை தேவையென வைத்தியர்கள் பரிந்துரைத்துள்ளனர். அதற்கமைய, சிறைச்சாலை வைத்தியசாலையில் அவருக்கு தொடர்ந்தும் சிகிச்சைகள் வழங்கப்படுமென ☞2

# வன்புணர்வின் பின் கழுத்தை நெரித்தே தலைமன்னார் சிறுமி படுகொலை

## உடற்கூறாய்வு சோதனையில் உறுதி

தலைமன்னாரில் வியாழக்கிழமை இரவு கடத்திக் கொல்லப்பட்ட 10 வயது சிறுமி பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்ட பின்னர் கழுத்து நெரித்துக் கொல்லப்பட்டார் என்று அவரது உடற்கூறுப் பரிசோதனையில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளது.

கொல்லப்பட்ட சிறுமியின் சடலம் நீதிமன்ற உத்தரவின்படி யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நேற்றுஉடற்கூறாய்வுக்கு உட்படுத்தப்பட்டது.





வியாழக்கிழமை இரவு காணாமற்போன சிறுமி வெள்ளிக்கிழமை காலையில் தென்னந் தோட்டம் ஒன்றிலிருந்து சடலமாக மீட்கப்பட்டார்.

சிறுமியின் தாயும் தந்தையும் புத்தளம் - பூக்குளம் கிராமத்தில் தமது தொழிலுக்காத் தங்கியிருக்கும்நிலையில், சிறுமி தனது அம்மம்மாவுடன்தங்கியிருந்துள்ளார். அவருடன் மூன்று சகோதரர்களும் அம்மம்மா வீட்டிலேயே வசிக்கின்றனர். குடும்பத்தின் நான்கு குழந்தைகளில் சிறுமி மூன்றாவது குழந்தை யாவார்.

இந்தக் கொலை தொடர்பில் சிறுமியின் வீட்டிற்கு அருகிலுள்ள தென்னந்தோப்பில் வேலை செய்த 52 வயதான திருகோணமலை - குச்சவெளயை சேர்ந்த ஒருவர் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டுள்ளார். அவரது அடையாள அட்டையில் ஒரு ☞11

## சுற்றுலாத் தலங்களுக்கு ரணில் நேரடிப் பயணம்

### சுற்றுலாவிகளுக்கான வசதிகளை மேம்படுத்தும் நோக்கங்களோடு

நாட்டின் சுற்றுலாத் துறையில்ஏற்பட்டிருக்கும் மறுமலர்ச்சி காரணமாக சுற்றுலா வலயங்களை அண்மித்த வசதிகளை மேம்படுத்துவது குறித்து கவனம் செலுத்தியிருக்கும் அதேநேரம், அது குறித்து ஆராய்வதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தங்கல்ல முதல் காலி வரையுள்ளபலசுற்றுலாத் தலங்களுக்கு ☞8

### அரசியல் ரீதியாகப் பாதகமாக இருந்தாலும்

## பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்களால் இலங்கைக்கு எதிர்கால நன்மை ஏற்படும்

### சாகல ரத்நாயக்க தெரிவிப்பு

ஜனாதிபதியின் வழிகாட்டலில் முன்னெடுக்கப்படும் பல பொருளாதார மறுசீரமைப்பு திட்டங்கள் அரசியல் ரீதியாக பாதகமானதாக இருந்தாலும் நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும், இவை நீண்ட காலமாகத் தாமதப்படுத்தப்பட்டு விட்டன என்று ஜனாதிபதியின் தேசிய பாதுகாப்பு தொடர்பான சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க தெரிவித்தார்.

மாத்தறை மாவட்டச் செயலாளர் அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற 2024 வரவு செலவுதிட்டம்தொடர்பில் விளக்கமளிக்கும் நிகழ்விலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஒன்றரை ☞9

## இலங்கைக்கு படையெடுக்கும் அமெ. உயர்மட்டக் குழுவினர்

நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளிட்ட சட்டங்களுடன் தொடர்புடைய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடுவதற்காக அமெரிக்க செனட் சபையின் வெளியுறவு தொடர்புகள் குழுவின் சிரேஷ்ட தொழில்சார் பணிக்குழாமின் பிரதிநிதிகள் ஆகியோர் இலங்கைக்கு வருகை தந்துள்ளனர்.

நாட்டின் பொருளாதாரம் மற்றும் அரசியல் நிலைமைகள்தொடர்பில் ஆழமான தெளிவை பெற்றுக்கொள்வதற்காக இந்த பிரதிநிதிகள் குழு நாட்டிற்கு வருகை தந்துள்ளதாக, அமெரிக்க தூதுவர் ஜூலி சங் குறிப்பிட்டுள்ளார்.

குறித்த பிரதிநிதிகள், பொருளாதார மறுசீரமைப்பு தொடர்பில் ஆராயவும், நிகழ்நிலை காப்பு சட்டம் உள்ளிட்ட அண்மைய சட்டங்களுடன் தொடர்புடைய சிக்கல்கள் குறித்து கலந்துரையா ☞2

## மின்சார கட்டண குறைப்பை மீளாய்வு செய்ய அறிவுறுத்து

### பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு விடுத்தது

மின்சார கட்டணக் குறைப்பு தொடர்பான பிரேரணையைமீளாய்வு செய்துசமர்ப்பிக்குமாறு இலங்கை மின்சார சபைக்கு அறிவித்துள்ளதாக பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மஞ்சுள பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்..

அத்துடன், திருத்தப்பட்ட பிரேரணையை பெப்ரவரி 22க்கு முன்னர் ஆணைக்குழுவிடம் கையளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும்தெரிவித்ததாவது:

மின்சார கட்டண திருத்தம் தொடர்பில் மக்கள் கருத்துகளை கேட்டறியும்நடவடிக்கை பெப்ரவரி 15 இடம்பெற்றது. ☞2

## பொறுப்புக்கூறல் விடயத்தில் இலங்கை வேகமாக பின்னோக்கிப் பயணிக்கிறது

### மனித உரிமைகள் கண்காணிப்பகம் குற்றச்சாட்டு

இலங்கை மனித உரிமைகள் மீறல்கள் மற்றும்பொறுப்புக்கூறல் விடயங்களில் பின்னோக்கி வேகமாக பயணிக்கின்றது என்று மனித உரிமைகள் கண்காணிப்பகம் குறிப்பிட்டுள்ளது.

இது தொடர்பாக ஆசியப் பிராந்தியத்தின் பிரதிப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

இலங்கைஇன்னமும் தவறான நிர்வாகம் மற்றும்பொறுப்புக்கூறல் குறைபாடு காரணமாக ஏற்பட்ட பொருளாதார நெருக்கடியினால் துன்பத்துக்கு உள்ளாகி வருகின்றது.

சமூக நீதி மற்றும் மனித உரிமைகள் விடயத்தில் கவனம்செலுத்துவதற்கு பதிலாக, கருத்து வெளியிடும் சுதந்திரத்தினை கட்டுப்படுத்துவதிலும், சர்வதேச மனிதஉரிமைகளைமட்டுப்படுத்துவதிலும், ☞9

## தனியார் மயமாக்கல் இலங்கையினது சமூக உறுதிப்பாட்டுக்கு கடும் குந்தகம்

### மாகாநயக்கர்கள் கூட்டாக ரணிலுக்குக் கடிதம்

பொது வளங்களை தனியார்மயமாக்குவது சமூக உறுதிப்பாட்டுக்கு குந்தகம் விளைவிக்கும் என்றுகவலைதெரிவித்த மூன்று பீடங்களின் மகாநாயக்க தேரர்கள் கூட்டாகஜனாதிபதிரணில் விக்கிரமசிங்கவிற்கு கடிதம் எழுதியுள்ளனர்.

அஸ்கிரிய, மல்வத்து, அமரபுர ஆகிய மூன்று பௌத்த பீடங்களின் பீடாதிபதிகள் அனுப்பியுள்ள குறித்த கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

பொது நலனைப் பாதுகாப்பதற்கான வலுவான பொறிமுறையொன்று ஏற்படுத்தப்பட வேண்டியது அவசியமாகின்றது. அரசியல் தலையீடு, வளங் ☞11

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

இரண்டாவது வழக்கு, முதல் வழக்கைத் தாக்கல் செய்த பீற்றர் இளஞ்செழியனின் பெயரில் தாக்கல் செய்யப்படாமல் வேறொருவர் பெயரில் தாக்கல் செய்யப்படவும்கூடும்.

பிரச்சினையை இணக்கமாகத் தீர்க்ககட்சித்தலைமைமுயற்சிகளை எடுக்கவில்லை என்றால் அது மேலும் மேலும் வழக்குகளைச் சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். அந்த வழக்குகள் முடிவுக்கு வர குறைந்தது 2 ஆண்-டுகளாவது ஆகும்.

ஜனவரி27திருகோணமலையில் நடந்த பொதுக் குழுக் கூட்டத்தில் பெரும்பான்மை உறுப்பினர்களின் ஆதரவோடு எடுக்கப்பட்ட முடிவை அப்படியேஅமுல்படுத்துவதாககட்சித் தலைமைஅறிவித்தால்வழக்குகளை வாபஸ்பெறுவதற்கானவாய்ப்புக்கள் அதிகம் என்று இது விடயத்தில் அக்கறையுள்ள தரப்புக்களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. பொதுச் செயலாளர் விடயத்தில் சமரசம் செய்த தரப்புகளுக்கு இந்த விடயம் தெளிவுபடுத்தப்பட்டிருப்பதாக அறிய முடிகின்றது.

திருகோணமலைப் பொதுக் குழுக் கூட்டத்தில் எடுக்கப் பட்டமுடிவைஅப்படியேநடைமுறைப் படுத்துவதுடன் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு முன்னதாக மீண்டும் பொதுக்குழுக்கூட்டத்தைநடத்தாமல் இருப்பதையும் உறுதிப்படுத்தினால் பீற்றர் இளஞ்செழியன் தாக்கல் செய்திருக்கும் வழக்கைத் திரும்பப்பெற வைக்க முடியும் என்றும் அதுவே பொதுக் குழுக் கூட்டத்தில் அன்றும் அவரது கோரிக்கையாக - வலியுறுத்தலாக இருந்தது என்பதால் கட்சித் தலைமை அந்த உத்தரவாதத்தைக் கொடுத்தால்வழக்கைத்திரும்பப்பெற வைக்க முடியும் என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

அதேபோன்று திருகோண மலையில் வழக்கைத் தாக்கல் செய்திருப்பவர்கள் தமது மாவட்டத்தைச் சேர்ந்தவரான குகதாசனின் பதவிக் காலத்தில் மாற்றம் இருக்கக்கூடாது, அவர் முழுமையாக 2 வருடங்களும் பொதுச் செயலாளராக இருக்க வேண்டும் என்ற நோக்கமே வழக்குகளின் பின்னணி என்-று கூறப்படுகின்றது. அதற்கான உத்தரவாதத்தைகட்சித்தலைவரும் குகதாசனும் வழங்கினால் ஒருவேளை அந்த வழக்கையும் திரும்பப்பெறவைக்கமுடியும்என்றும் சுட்டிக்காட்டப்பட்டிருக்கின்றது.

பொதுச் செயலாளர் பதவி தொடர்பில் ஏற்கனவே நடத்தப்பட்ட சமரசப் பேச்சுக்களில் குகதாசன் தனது பதவிக் காலத்தில் ஒரு வருட காலத்தை சிறீநேசனுக்கு விட்டுக்கொடுக்க இணங்கிப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டுவிட்டார்.அதுஅவரது சொந்தமுடிவுஅந்தஇணக்கத்தின்படி அவர் தனது பதவியை ஒரு வருடம் முடிந்ததும் தூக்கி எறிந்தால் அதை யாரும் கட்டுப்படுத்த முடியாது. அப்படிப்பட்ட நிலையில் கட்சி யாப்பில் கூறப்பட்டுள்ளபடிதான் அடுத்த பொதுச் செயலாளர் தெரிவு செய்யப்படுவார், இரகசிய ஒப்பந்தங்கள் இணக்கங்களின் மூலம் யாரும் அந்தப் பதவியில் அமர்த்தப்படமாட்டார்கள் என்றும் நீதிமன்றத்தில்கட்சித்தலைமையால் உத்தரவாதமளிக்கப்படவேண்டும் என்று திருகோணமலையில் வழக்குத் தாக்கல் செய்த தரப்புக்கள் எதிர்பார்க்கக்கூடும் என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆனால், அந்த அறிவுரைகளை, ஆலோசனைகளை, யோசனை களை செவிமடுக்கும் நிலையில் கட்சித் தலைமை இருப்பதற்கான சமிக்ஞைகள் எவையும் தெரியவில்லை என்கின்றன கட்சிக்கு நெருக்கமான வட்டாரங் கள். இப்போது கட்சித் தலைமைக்கு உள்ள தெரிவுகள், திருகோணமலைப் பொதுக் குழுக் கூட்டத்தில்எடுக்கப்பட்ட முடிவுகளை அப்படியே நடைமுறைப்படுத்துவது அல்லது வழக்குகளைச் சட்டப்படி எதிர்கொள்வது.

வழக்குகளை எதிர்கொள் வதுதான்என்றுகட்சிதீர்மானித்தால், அது மேலும் பல வழக்குகளையும் சந்திக்கவேண்டிவரும் என்பதுடன் கட்சியின்தலைவரைத்தெரிவுசெய்த ஜனவரி 21 பொதுக்குழுக்கூட்டத்தின் சட்டபூர்வத் தன்மையும் கேள்விக் குள்ளாக்கப்பட்டு கட்சி முடக்க நிலைக்குச் செல்-லும் ஆபத்தும் இருக்கின்றது. எனவே இதனைச் சூழலுக்கு ஏற்ப பக்குவமாகக் கையாள்வதே புத்திசாலித் தனமானது.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## கச்சதீவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடற்படையினர் கைது செய்து யாழ்ப்பாணம் சிறையில் அடைத் தனர்.

மீனவர்களின் வழக்கு பெப்ரவரி 16 யாழ்ப்பாணம் ஊர்காவற்துறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது அப்போது வழக்கை விசாரித்த நீதிவான் கஜநீதிபாலன் 23 மீனவர்களில் 20 மீனவர்களை விடுதலைசெய்துஉத்தரவிட்டதுடன், இரண்டு மீன்பிடி விசைப் படகுகளினதும் ஓட்டுநர்களான பெக்கர் மற்றும் ரொபேர்ட் ஆகிய இருவருக்கும் ஆறு மாத காலச் சிறைத்தண்டனையும், அதேபோல் இலங்கை கடற்படையால் 2019 ஆண்டசிறைபிடிக்கப்பட்டுஇலங்கை நீதிமன்றத்தால்நிபந்தனைகளுடன் விடுதலை செய்யப்பட்ட மீனவர் மெல்வின் மீண்டும் எல்லை தாண்டிய குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டதால் அவருக்கு ஓராண்டு சிறை தண்டனையும் விதித்துத் தீர்ப்பளித்தார்.

இலங்கை நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு இராமேஸ்வரம் மீனவர்கள் மத்தியில் மிகப்பெரிய அதிர்ச்சியை ஏற்படுத்திய நிலையில் இந்த தீர்ப்பை உடனடியாக இரத்து செய்ய வேண்டும், சிறை தண்டனை விதிக்கப்பட்ட ரொபேர்ட், பெக்கர், மெல்வின் ஆகிய மூன்று மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்யவேண்டும் என்று இராமேஸ்வரம் மீனவர்கள் வலியுறுத்தி வருகின்றனர். இது தொடர்பில் இரமேஸ்வரம் மீன்பிடி துறைமுகத்தில் அனைத்து விசைப்படகு மீனவர்கள் சங்கம் சார்பில் அவசர ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.

சிறை தண்டனை விதிக்கப் பட்டுள்ள மூன்று மீனவர்களின் குடும்பத்தினரும் இந்தக் கூட்டத்தில் கலந்துகொண்டு கண்ணீருடன், சிறையில் உள்ள தங்களது உறவினர்களை உடனடியாக விடுதலை செய்யுமாறு வலியுறுத்தி கோரிக்கை வைத்தனர்.

கூட்டத்தில், பெப்ரவரி 23, 24 ஆகிய தினங்களில் கச்சத்தீவில் நடைபெற உள்ள புனித அந்தோணியார் கோவில் திருவிழாவில் கலந்துகொள்ளாமல் தமிழக மீனவர்கள் புறக்கணிக்க வேண்டும், விசைப்படகுமீனவர்கள் இன்று (நேற்று) முதல் தொடர் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடுவார்கள், நாளை(இன்று) மீன்பிடி விசைப்படகுகளில் கறுப்பு கொடியேற்றி தங்களது எதிர்ப்பை வெளிப்படுத்துவார்கள் என்று தீர்மானித்தார்கள்.

இராமேஸ்வரத்தில் இருந்து நாளைமறுதினம்செவ்வாய்கிழமை இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலிவலகத்திற்கு மூன்று நாட்கள் நடந்து சென்று விசைப்படகு மீனவர்கள் அனைவரும் தங்களது படகு உரிமம், மீனவர் அடையாள அட்டை உள்ளிட்டவைகளை ஆட்சியரிடம் ஒப்படைப்பது என்றும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், தங்களது கண்டனத்தை பதிவு செய்யும் விதமாக இராமேஸ்வரம் மீன்பிடி அனுமதிச்சீட்டு வழங்கும் அலுவலகம் முன்பு மீனவர்கள் சிறையில் உள்ளமீனவர்களின்குடும்பத்துடன் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இலங்கை அரசாங்கம் உடனடியாக நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

## கெஹலிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பான மருத்துவ அறிக்கைகள் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாகவும் நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இந்த நடவடிக்கைஎடுக்கப்பட்டுள்ளதாகவும் திணைக்களம் மேலும் தெரிவித்துள்ளது.

சர்ச்சைக்குரிய ஹியூமோகுளோபின் மருந்து கொடுக்கல் வாங்கல் தொடர்பில் கெஹலிய ரம்புக்வெல்ல உள்ளிட்ட 7 பேரை எதிர்வரும் 29 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு மாளிகாகந்த நீதிவான் லோச்சனா அபேவிக்ரம இரண்டாவது தடவையாகவும் கெஹலியவின் விளக்கமறியலை நீடித்திருந்தார்.

## மின்சார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதன் பின்னர் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டது.

அந்தக் கூட்டத்தில் 40 பேர் தமது யோசனைகளை சமர்ப்பித்த நிலையில் இலங்கை மின்சார சபையினால் மேற்கொள்ளப்பட்ட கட்டணக் குறைப்பு வீதத்தை விடவும் அதிக சதவீதத்தில் கட்டணக் குறைப்பை மேற்கொள்ள வேண்டுமென அவர்கள் வலியுறுத் தினர்.

ஆகவே இந்த விடயங்கள் அனைத்தையும்பரிசீலித்து, மின்சார சபையினால் முன்வைக்கப்பட்ட யோசனையை மீள்பரிசீலனை செய்து திருத்தம் செய்ய வேண்டுமென பொது பயன்பாடுகள் ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை தற்போதைய மின்சார கட்டணத்தை 20 முதல் 25 சதவீதம் வரை குறைக்க முடியுமென இலங்கை பொது பயன்பாடுகள் ஆணைக்குழுவின் ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கைமின்சாரசபையினால் முன்மொழியப்பட்ட மின் கட்டண திருத்தம் மற்றும் இலங்கை மின்சார சபையின் அண்மைய நிதிநிலை அறிக்கைகள் ஆகியவற்றின் அடிப்படையிலான மீளாய்வின் பிரகாரம் இந்த விடயத்தினை முன்மொழிவதாக அச்சங்கம் மேலும் தெரிவித்துள்ளது.

ஏற்கனவே மின் கட்டணத்தை அடுத்த மாதத்திற்கு முன்னதாக திருத்த நடவடிக்கை எடுக்கப்படும் என பொது பயன்பாடுகள் ஆணைக்குழுஅறிவித்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## இலங்கைக்கு ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டவும் அரச அதிகாரிகள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரை சந்திக்கவுள்ளதாகஅமெரிக்கதூதுவர் ஜூலி சங் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, அமெரிக்க பொது இராஜதந்திரத்திற்கான துணைச் செயலாளர் எலிசபெத் எம். அலன் இலங்கைக்கு வரவுள்ளார்.

அமெரிக்காவிலிருந்து பெப்ரவரி 12 புறப்பட்ட அவர் பெப்ரவரி 22 வரை ஜோர்தான், இலங்கை மற்றும் இந்தியா ஆகிய நாடுகளுக்கான பயணத்தில் இருக்கிறார், நாடுகளுக்கிடையிலான கூட்டாண்மை மற்றும் கூட்டணிகளைவலுப்படுத்துவதற்கும் விரிவுபடுத்துவதற்கும் அமெரிக்காவின் உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தும் முகமாக அவர் தனது சந்திப்புக்களை நடத்தவுள்ளார்.

அமெரிக்க வெளியுறவுக் கொள்கைமற்றும்பொதுஇராஜதந்திர முயற்சிகளின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதுடன் கருத்து சுதந்திரம், பொருளாதாரத்திற்கு அதிகாரமளித்தல் மற்றும் உலகளாவிய ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கும் அலனின் பயணம் முக்கியத்துவமாககாணப்படுகின்றது.

மூன்று நாடுகளுக்குமான பயணத்தில் ஜோர்தானுக்கு சென்ற அலன், ஜோர்தானிய இளைஞர்கள் மீது ஆங்கில மொழி திட்டங்களின் மாற்றத்தக்க தாக்கத்தை ஆராய்ந்தார். தேசிய பாதுகாப்புக்கான ஒரு கருவியாக ஒருங்கிணைந்த, புதுமையான மூலோபாய தகவல்தொடர்புகள் குறித்து ஆராய, அந்நாட்டு வெளியுறவுத்துறை பொது விவகார நிபுணர்கள் மற்றும் ஜோர்தான் அரச அதிகாரிகளுடன் சந்திப்புக்களை நடத்தினார்.

அத்துடன் அமெரிக்க பொது இராஜதந்திரத் திட்டங்களின் முன்னாள் மாணவர்கள் மற்றும் சிவில் சமூகத் தலைவர்களுடன் பிராந்திய முன்னோக்குகள் குறித்து கலந்துரையாடினார்.

ஜோர்தானுக்கான பயணத்தின் பின்னர், இலங்கைக்குவருகைதரும் அலன், இலங்கையின்பொருளாதார மீட்சிக்கான அமெரிக்க ஆதரவை மீண்டும் உறுதிப்படுத்தவும், சுதந்திரமானமற்றும்இந்தோ-பசுபிக் பகுதியை ஊக்குவிக்கும் நோக்கில் சந்திப்புக்களை மேற்கொள்வார்.

இலங்கைக்கான விஜயத்தின் போது, ஊடகவியலாளர்கள், சிவில் சமூக உறுப்பினர்கள், அரச அதிகாரிகள் மற்றும் இலங்கையில் உள்ள அமெரிக்க தூதரகத்தின் இளைஞர் மன்றம் உட்பட பலதரப்பட்டவர்களுடன் கருத்துச் சுதந்திரம் மற்றும் ஜனநாயக விழுமியங்கள் பற்றிய கலந்துரையாடல்களில் ஈடுபடவுள்ளார்.

அலனின் பயணத்தின் இறுதித் தரிப்பிடமாக இந்தியா அமைகின்றது.

இதன்போது, பொருளாதாரத் துறையில் பெண்களின் பங்களிப்பை அதிகரிப்பதில் கவனம் செலுத்துவார். வணிகத் தலைவர்கள் மற்றும் அமெரிக்க அரசாங்கத்தால் நிதியளிக்கப்பட்ட திட்ட முன்னாள் மாணவர்களுடன் கலந்துரையாடல்களில் ஈடுபடுவார்.

பெண்களின் பொருளாதார மேம்பாட்டை மேம்படுத்துவதற்காக அமெரிக்க - இந்திய புலம்பெயர்ந்தோர், பெருநிறுவனங்கள், கல்வியாளர்கள் மற்றும் வணிகத் துறையுடன் அமெரிக்காவின்மூலோபாயமற்றும் நீடித்த ஒத்துழைப்பைக்கள் குறித்து ஆராயவுள்ளார்

அதேநேரம், இந்தோ-பசுபிக் முக்கிய கூட்டாளிகளுடன் அமெரிக்காவின் ஒத்துழைப்பை வலுப்படுத்துவதற்காக இன்று பெப்ரவரி 18 முதல் 23 வரையில் இந்தியா, மாலைத்தீவு மற்றும் இலங்கைக்குஅமெரிக்கஇராஜாங்கத் திணைக்களத்தின்முகாத்துவமற்றும் வளங்களுக்கானதுணைசெயலாளர் ரிச்சர்ட் ஆர். வர்மா வரவுள்ளார்.

அமெரிக்காவின் இந்தோ-பசுபிக் மூலோபாயத்தின் இரண்டு ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு அவரது பயணம் இடம்பெறுவதோடு திறந்த, பாதுகாப்பான மற்றும் வளமான பிராந்தியத்திற்கானஅமெரிக்காவின் நீடித்த உறுதிப்பாட்டை மீண்டும் உறுதிப்படுத்தும் வகையில் அது அமையவுள்ளதாக அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ரிச்சர்ட் வர்மா, இந்தியாவின் புதுடில்லிக்குமுதலில்விஜயம்செய்து அங்கு பொருளாதார மேம்பாடு, பாதுகாப்பு மற்றும் தொழில்நுட்பம் உட்பட நெருக்கடிகளில் இருந்து அமெரிக்க-இந்திய உலகளாவிய மூலோபாய கூட்டாண்மையை முன்னேற்றுவதற்காக மூத்த அரச அதிகாரிகள், வணிகத் தலைவர்கள் மற்றும் தொழில்முனைவோரைச் சந்திக்கவுள்ளார்.

பின்னர், இந்தியாவிலிருந்து, அவர் மாலைத்தீவின் தலைநகர் மாலேவுக்குச் செல்லவுள்ளதோடு அங்கு, மூத்த அதிகாரிகளைச் சந்தித்து,பொருளாதாரஒத்துழைப்பை அதிகரிப்பதிலும், கடல்சார் பாதுகாப்பை மேம்படுத்துவதிலும் பேச்சு நடத்தவுள்ளார்.

அத்துடன், அமெரிக்காவிற்கும் மாலத்தீவிற்கும் இடையிலான மக்களிடையேயான உறவுகளை மேலும் அதிகரிக்க உதவும் வகையில் மாலேயில் புதிய அமெரிக்க தூதரகத்திற்கான திட்டமிடப்பட்ட அலுவலக பகுதியை பார்வையிடவுள்ளார்.

இதனையடுத்துமாலேயிலிருந்து கொழும்புக்கு விஜயம் செய்யவுள்ள அவர், மூத்த அதிகாரிகளுடனான அவரது சந்திப்புகளைச் செய்யவுள்ளார்.

குறிப்பாக, அமெரிக்க - -இலங்கை பாதுகாப்பு மற்றும் கடல்சார் பாதுகாப்பு ஒத்துழைப்பை ஆதரிக்கும் வகையில் அவரது விஜயம் அமையவுள்ளதோடு, கொழும்பை ஒரு பிராந்திய கப்பல் போக்குவரத்து மையமாக மாற்றுவதற்கு அமெரிக்கா 553 மில்லியன் டொலர்கள் நிதியுதவி அளிக்கும் கொழும்பு துறைமுகத்தின் மேற்கு கொள்கலன் முனையத்திற்கானபயணத்தையும், மேற்கொள்ளவுள்ளார்.

இலங்கையின் தற்போதைய பொருளாதார மீட்சிக்கு அமெரிக்கா ஆதரவளித்து வரும் நிலையில், அதுபற்றிய ஆய்வுகளை மேற்கொள்ளும் அவர் இறுதியாக, சிவில் சமூகத் தலைவர்களைச் சந்தித்து, இலங்கையில் ஜனநாயக ஆட்சியைப்பற்றியகருத்துக்களையும் பெறவுள்ளதோடு அரசாங்க அதிகாரிகளுடன் கருத்துரிமை மற்றும் வெளிப்படையான பேச்சுரிமையைப் பாதுகாப்பதற்கு அமெரிக்கவின் ஆதரவினை வெளிப்படுத்தவுள்ளார்.


காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு

076 3983858

மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com





காலைக்கதிர் Kalaikkathir

# மாளிகைக்காடு, சாய்ந்தமருது பிரதேசத்தில் மாணவர்கள் இருவர் கடலில் மூழ்கி மாயம்

(எஸ்.அஷ்ரப்கான்)

மாளிகைக்காடு- சாய்ந்தமருது பிரதேசத்தை சேர்ந்த இரண்டு மாணவர்கள் நிந்தவூர் பிரதேச கடலில் புகைப்படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்தபோது கடலில் அடித்துச் செல்லப்பட்டு காணாமல் போயுள்ளனர்.



மாளிகைக்காடு- சாய்ந்தமருது எல்லை வீதியில் அமைந்துள்ள பிரபல பாடசாலை மாணவர்களான 13-15 வயதுக்குட்பட்ட 08 மாணவர்கள் வெள்ளிக்கிழமை ஜ/ம்மா தொழுகையை முடித்துக்கொண்டு துவிச்சக்கர வண்டியில் நிந்தவூர்- ஒலுவில் எல்லை கடற்கரைக்கு சென்று புகைப்படம் எடுத்து விளையாடிக் கொண்டிருந்த போது மாலை 04.20 மணி அளவில் அதில் இருவரை கடலலை உள்ளிழுத்து சென்றுவிட்டதாக முதற்கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

கடலில் இழுத்து காணாமல் போன மாணவர்களை சம்பவத்தை கேள்வியுற்ற நிமிடம் முதல் மீனவர்களும், பொதுமக்களும் இயந்திர படகுகளை கொண்டு தேடியும் உடலை கண்டுபிடிக்க முடியவில்லை. ஏனைய ஆறு மாணவர்களும் அவர்கள் பயணித்த துவிச்சக்கர வண்டிகளும் நிந்தவூர் பொலிஸாரின் கட்டுப்பாட்டில் மேலதிக விசாரணைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளதுடன் மேலதிக விசாரணைகளை நிந்தவூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (05)

# வவுனியாவில் பொலிஸாரால் 32 வயது இளைஞன் கைது

வவுனியா நகரசபை மைதானத்தில் நடைபயிற்சிக்கு வருகை தந்தவரின் நகைகளை திருடிய சம்பவம் தொடர்பில் 32 வயது இளைஞன் ஒருவர் வெள்ளிக்கிழமை கைது செய்யப்பட்டுள்ளார் என வவுனியா பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, தோணிக்கல் பகுதியைச் சேர்ந்த பெண் ஒருவர் நடை பயிற்சிக்காக கடந்த சில நாள்களாக வவுனியா நகரசபை மைதானத்திற்கு வந்து சென்றுள்ளார். வழமை போன்று வியாழக் கிழமை மாலையும் நகரசபைக்கு வருகை தந்துள்ளார். இதன்போது தான் அணிந்திருந்த சங்கிலி, காப்பு உள்ளிட்ட 4 பவுண் தங்க ஆபரணங்களை நகரசபை வளாகத்தில் உள்ள மோட்டர் சைக்கிள் தரிப்பிடத்தில் நிறுத்தப்பட்ட தனது மோட்டார் சைக்கிள் இருக்கைக்குள் வைத்து பூட்டி விட்டு நடைப் பயிற்சிக்கு சென்றுள்ளார்.

நடைபயிற்சி முடிந்த பின்னர் தனது மோட்டார் சைக்கிளை எடுப்பதற்காக குறித்த பெண் வருகை தந்த போது அவரது மோட்டர் சைக்கிள் இருக்கை உடைக்கப்பட்டு அதில் இருந்த நகைகள் திருடப்பட்டிருந்தன. இதனையடுத்து பாதிக்கப்பட்ட பெண் வவுனியா தலைமை பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவில் இரவு முறைப்பாடு செய்திருந்தார்.

முறைப்பாட்டையடுத்து தலைமை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ஜெயக் கொடி வழிகாட்டலில், குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஜயத்திலக தலைமையில் பொலிஸ் சார்ஜன் திசாநாயக்கா, பொலிஸ் கான்ஸ்டபிள்களான உபாலி, தயாளன், ரணில் ஆகியோர் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர்.

இதன்போது, குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, பம்பைமடுப் பகுதியைச் சேர்ந்த 32 வயது இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், அவரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது திருடப்பட்ட ஆறு அரை லட்சம் ரூபா பெறுமதியான 4 பவுண் நகைகளும் உடைமையில் இருந்து மீட்கப்பட்டதுடன், திருட்டுச் சம்பவத்தின் போது சந்தேக நபர் தப்பிச் செல்ல பயன்படுத்திய மோட்டர் சைக்கிளும் பொலிஸாரால் மீட்கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளின் பின் கைது செய்யப்பட்ட நபரையும், மீட்கப்பட்ட பொருள்களையும் நீதிமன்றில் முற்படுத்தவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (05 -100)

# உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறையில் நிவாரணம்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

உலக உணவுத் திட்டத்தின் கீழ் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அண்மையில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தின் போது பாதிக்கப்பட்ட குடும்பங்களில் இருந்து தெரிவு செய்யப்பட்ட சுமார் 1262 குடும்பங்களுக்கு சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மது ஹனீபா தலைமையில் நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.





சம்மாந்துறை பிரதேச செயலக பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல் எம் அஸ்லமின் நெறிப்படுத்தலின் கீழ் இந் நிவாரணம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

உலக உணவுத் திட்டம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் பொருளாதார நெருக்கடி காலகட்டத்திலும் சுமார் 7000 குடும்பங்களுக்கு நிவாரணப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

அதேவேளை தற்போது அம்பாறை மாவட்டத்தில் வழங்கப்படும் நிவாரண வேலைத்திட்டதில் மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் 04 பிரதேச செயலகங்கள் மட்டுமே தெரிவு செய்யப்பட்டன. அதில் சம்மாந்துறை பிரதேச செயலகமும் ஒன்றாகும் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

இந் நிவாரண பொதி வழங்கும் நிகழ்வில் பிரதேச செயலக கணக்காளர் ஐ.எல் பாரிஸ், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.எம் அஸ்லம், கிராம நிர்வாக உத்தியோகத்தர் எம்.எல். எம்.தாஸீம், பிரதம முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் ஏ.எம் நவாஸ், அனர்த்த நிவாரண சேவை உத்தியோகத்தர் எஸ்.எம் அஸாருதீன், அபிவிருத்தி உத்தியோகத்தர்களான எம்.என்.எம் சசீர்,எம்.டி அஸ்மீர்,எம்.ஆர் பௌசான்,உட்பட பலரும் கலந்து கொண்டனர். (05)

# நூலகம் மற்றும் சுத்தமான குடிதண்ணீர் வவுனியா தொடருந்து நிலையத்தில் வசதி

பயணிகளின் நலன் கருதி வவுனியா ரயில் நிலையத்தில் நூலக வசதி மற்றும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் வெள்ளிக்கிழமை ஏற்படுத்தி கொடுக்கப்பட்டன.

அதிகளவிலான பயணிகள் தினமும் வந்து செல்லும் வவுனியா, ரயில் நிலையத்தில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதிகள் மற்றும் நூலக வசதிகள் உள்ளிட்ட இதர வசதிகள் இல்லாத நிலைமை தொடர்ச்சியாகக் காணப்பட்டு வந்தன.

இந் நிலையில் பல்வேறு தன்னார்வ தொண்டு நிறுவனங்களிடம் வவுனியா ரயில் நிலையத்தினர் தொடர்பு கொண்டு விடுத்த கோரிக்கைக்கு அமைவாக பல்வேறு நலத்திட்டங்கள் மக்கள் பாவனைக்காக வழங்கப்பட்டுள்ளன.

அந்த வகையில் வீ.வீ.கே நிறுவனத்தினருடைய அனுசரணையில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதியும் நூலகத்திற்கான அலுமாரி வசதிகளும் ஏற்படுத்திக் கொடுக்கப்பட்ட நிலையில் திறந்து வைக்கப்பட்டது.

வீவீகே நிறுவனத்தினர் கடந்த வருடம் முதன் முதலில் மாங்குளம் ரயில் நிலையத்திற்கு குடிநீர் வசதியும், நூலக வசதியும் ஏற்படுத்திக் கொடுத்தனர். அதன் பின் பளை ரயில் நிலையத்திற்கும் தமது சேவையை வழங்கினர். அதனைத் தொடர்ந்து வவுனியா ரயில் நிலையத்திற்கு அந்த வசதிகள் பெற்றுக் கொடுக்கப்பட்டன.

ரயில் நிலைய அதிபரின் கோரிக்கையின் பேரில் வீவீகே நிறுவனத்தின் நிர்வாக குழுமத்தைச் சேர்ந்தவரும், முன்னாள் கிரிக்கட் வீரரும், வர்ணனையாளருமான ரசல் ஆர்னோல்ட், வீவீகே நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் மருத்துவர் க.உதயசீலன், வீவீகே கணக்காய்வு நிறுவனத்தின் வவுனியா கிளை முகாமையாளர் சஜிந்தன், மாங்குளம் முன்னாள் ரயில் நிலைய அதிபர் க.கலைவேந்தன், ரயில் நிலைய உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05 -100)

# பூவரசன்குளம் பொலிஸாரால் சந்தேகநபர்கள் இருவர்

வவுனியாவில் பல்வேறு இடங்களில் 30 இற்கும் மேற்பட்ட திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பூவரசன்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டு சம்பவம் ஒன்று தொடர்பில் கிடைத்த முறைப்பாட்டுக்கு அமைய விசாரணைகளை முன்னெடுத்த போதே இருவரும் கைது செய்யப்பட்டனர் எனவும், அவர்களிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் போது பல பொருள்கள் மீட்கப்பட்டன எனவும், 30 இற்கும் மேற்பட்ட திருட்டு சம்பவங்களுடன் அவர்கள் இருவரும் தொடர்புடையவர்கள் எனத் தெரிய வந்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா மாவட்டத்தில் 30 இற்கும் மேற்பட்ட இடங்களில் நீர் இறைக்கும் மோட்டர்கள், குழாய் கிணற்று மோட்டர்கள், சிலிண்டர்கள், மின் விசிறிகள், கிறைண்டர்கள் என பல வகையான பொருள்களை திருடிய சம்பவங்களுடன் இருவரும் தொடர்புபட்டுள்ளதுடன், அவர்களிடம் இருந்து திருடப்பட்ட பெருந்தொகை பொருள்களும் மீட்கப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்டவர்கள் வவுனியா, வாரிக்குட்டியூர் மற்றும் சமயபுரம் பகுதிகளைச் சேர்ந்தவர்களாவர். குறித்த இருவரும் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 14 நாள்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர் என பூவரசன்குளம் பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

(05-100)

# யாழ். சிறையில் இந்திய மீனவர்களை நேரில் சந்தித்தார் அமைச்சர் ஜீவன்

மீனவர் பிரச்சினைக்கு விரைவில் நிலையானதொரு தீர்வைக் காணுமாறு இந்திய அரசிடமும், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடமும் கோரிக்கை விடுத்துள்ளோம் - என்று இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும், நீர்வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சருமான ஜீவன் தொண்டமான் தெரிவித்தார்.



யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் உள்ள 43 தமிழக மீனவர்களை அமைச்சர் நேரில் சென்று சந்தித்தார். அவர்களிடம் சுகம் விசாரித்ததுடன், அவர்களுக்குள்ள பிரச்சினைகளைக் கேட்டறிந்துகொண்டார்.

அதன்பின்னர் செய்தியாளர்களிடம் கருத்து வெளியிட்ட அமைச்சர் கூறியவை வருமாறு -

யாழ்ப்பாணம் சிறையில் உள்ள 43 தமிழக மீனவர்களை சந்தித்தேன். அவர்கள் ஏன் கைது செய்யப்பட்டுள்ளனர் என்பது பற்றி எடுத்துக் கூறினேன். அவர்களும் அதனை ஏற்றுக்கொண்டனர். 43 மீனவர்களில் இருவர் கடத்தல் சம்பவத்துடன் தொடர்புபட்டுள்ளனர். ஏனைய 41 மீனவர்களுக்கும் இலங்கை அரசு மூலமாக அல்லது, எம்மால் முடிந்த உதவிகளை நிச்சயம் செய்வோம். இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்குள் அவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என நம்புகின்றேன். இலங்கை பொலிஸார் தம்மை நன்றாக நடத்துகின்றனர் என மீனவர்கள் தெரிவித்தனர்.

வடக்கில் உள்ள மீனவர்களும் தமிழர்கள், போரால் பாதிக்கப்பட்டவர்கள், சிறிய படகுகளை வைத்துக்கொண்டுதான் அவர்கள் தமது வாழ்க்கையைக் கொண்டு நடத்துகின்றனர். அவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படக்கூடாது.

தமிழக மீனவர்கள் ரோலர் படகுகளைப் பயன்படுத்தி அதிகளவான மீன்களைப் பிடிக்கின்றனர், இலங்கை கடல் வளமும் சேதமடைகின்றது. இது கடல்சார் சட்டங்களையும் மீறும் செயலாகும். மீனவர் பிரச்சினைக்கு விரைவில் தீர்வு காணுமாறு இந்திய அரசிடமும், இலங்கை ஜனாதிபதியிடமும் நாம் கோரிக்கை முன்வைத்துள்ளோம். - என்றார். (05)

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## ஆபத்திலிருந்து காக்க அவசர தீர்வு அவசியம்

இது அறுவடைக் காலம். வடக்கில் பெரும்பாலான வயல் நிலங்களில் அறுவடை மும்முரமாக நடந்து வருகின்றது. நெல்லுக்கு ஆட்சியாளர்கள் உத்தரவாத விலையோ, அரச கொள்முதல் சலுகையோ அறிவிக்காத நிலையில் விவசாயிகள் தமது நெல்லுக்கு உரிய விலை கிடைக்கும் வகையில் அவற்றை நீண்ட நாட்களுக்குக் களஞ்சியப்படுத்தி வைக்கவேண்டியவர்களாக இருக்கின்றார். ஆனால் அதற்குத் தேவையான நெல்லைக் காயவிடும் களங்கள் வடக்கில் போதியளவில் இல்லை. பல இடங்களில் அத்தகைய களங்களே இல்லை. இதனால் விவசாயிகள் வீதிகளில் நெல்லைக் காய விடுகிறார்கள்.

இப்படி வீதியில் நெல்லைக் காயவிடுவதால் அடிக்கடி விபத்துக்கள் ஏற்படுகின்றன. கடந்த சில வருடங்களில் இதனால் பல உயிரிழப்புக்களும் ஏற்பட்டுள்ளன. இருப்பினும் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு அரச நிறுவனங்கள் எவையும் முன்வரவில்லை. விவசாயிகள் தொடர்ந்தும் வீதிகளிலேயே நெல்லைக் காயவைத்து வருகின்றார்கள். இதனால் விபத்து உயிரிழப்புக்கள் ஏற்படுவது தவிர, வேறு பாதிப்புக்களும் வரக்கூடும் என்கிற எச்சரிக்கை இப்போது வந்திருக்கிறது. எனவே இது விழித்துக்கொள்ளவேண்டிய நேரம்.

வீதியில் நெல்லைக் காயவிடும்போது 'கற்மியம்' எனும் மூலகம் கலப்பதால் எனவே அந்த நெல் அரிசியை உணவாக உட்கொள்பவர்களுக்குப் புற்று நோய் ஏற்படும் வாய்ப்புக்கள் அதிகரிக்கும் என்று முல்லைத்தீவு பிராந்திய சுகாதாரசேவைகள் பணிப்பாளர் கு.அகிலேந்திரன் எச்சரிக்கை செய்துள்ளார். எனவே, விவசாயிகள் வீதியில் நெல்லை உலரவிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றபோது பணிப்பாளர் இந்தக் கருத்தைத் தெரிவித்தார். "வீதியில் நெல்லை உலரவிடுவதனால் வீதி விபத்தையும் தாண்டி பெரும் ஆபத்தொன்று ஏற்படலாம். வாகன டயர்கள் வீதியில் உராய்வதனால் 'கற்மியம்' எனும் மூலகம் வீதியில் படிகிறது. அந்த வீதியிலேயே விவசாயிகள் நெல்லைக் காயவைக்கின்றனர்.

வெறும் வீதியில் நெல் காயும்போது 'கற்மியம்' நெல்லோடு கலந்துவிடுகின்றது. அந்த நெல்லை அரிசியாக்கும்போது அதிலும் கற்மியம் கலந்திருக்கும். தொடர்ந்து பத்துத் தொடக்கம் பதினைந்து வருடங்கள் இத்தகைய கற்மியம் கலந்த அரிசியை உணவாக எடுப்போருக்குப் புற்றுநோய் ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கும். எனவே, வீதியில் நெல் உலரவிடுவதை விவசாயிகள் தவிர்ப்பதே சிறந்தது" என்று பணிப்பாளர் தெரிவித்தார்.

இது வடக்கில் உள்ள மொத்தச் சமூகத்திற்குமான எச்சரிக்கை. இது குறித்து அரச அதிகாரிகள், ஆளும் தரப்பினர் உரிய அக்கறை செலுத்தவேண்டும். நெல்லைக் காயவிடுவதற்கான மாற்று ஏற்பாடுகள் குறித்து உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து, வீதியில் நெல்லைக் காயவிடும் பழக்கத்தை ஒரு முடிவுக்குக் கொண்டுவரவேண்டும். தற்போதைய பொருளாதார நிலமையில் நெல்லைக் காயவிடுவதற்கான களங்களை அமைப்பதற்கான நிதியைப் பெறுவது சிரமமானது என்பதால், தற்காலிகமாக மாற்று ஏற்பாடுகள் மூலம் வயல் நிலங்களிலேயே நெல்லைக் காயவைப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து ஆராயப்படவேண்டும்.

வடக்கு மக்கள் நோயாளிச் சமூகமாக மாறுவதற்கு முன்பாக – அவசரமாக – இதற்கான தீர்வு காணப்பட்டு அமுல்படுத்தப்படவேண்டும். வடக்கு ஆளுநர் உள்ளிட்ட தரப்பினர் இது குறித்து அதிக அக்கறை செலுத்தி தீர்வுகளைக் கண்டறியவேண்டும்.

# பற்கள் நிறம் மாறுவது ஏன்?




கு.கணேசன்

மற்றவர்களைப் பார்த்து புன்னகை புரியும்போது பற்கள் 'பளிச்'சென்று இருக்க வேண்டும் என்று விரும்பாதவர்கள் உண்டா? முகத்தை ஃபேசியல், பிளீச்சிங் என்று செயற்கைமுறையில் அழகூட்டுவதைப் போல இப்போது பற்கள் கொஞ்சமாக மஞ்சள் நிறத்துக்கு மாறிவிட்டால்கூட பலரும் அதற்கு அழகூட்ட பல் மருத்துவமனைகளிலும், அழகு நிலையங்களிலும் வரிசையில் காத்திருக்கிறார்கள்.

### பல்லுக்கு நிறம் தருவது எது?

நம் ஒவ்வொரு பல்லிலும் வெளியில் தெரிகிற



பகுதிக்கு 'எனாமல்' என்று பெயர். இதற்கு அடுத்த பகுதியாக இருப்பது 'டென்டின்' (னுநவெiெ). ஒருவருக்கு டென்டின் எந்த நிறத்தில் அமைகிறதோ அந்த நிறம்தான் அவருடைய பற்களின் நிறம். பொதுவாக, பற்கள் எல்லோருக்கும் காபியில் கலக்கப்படும் சர்க்கரை மாதிரி வெள்ளையாக இருக்காது முத்துப்போன்ற வெண்மை, வெளிர் மஞ்சள், சந்தன நிறம் என்று பற்களுக்கு இயற்கையிலேயே பல நிறங்கள் உண்டு.

பல் முளைக்கும்போது வெள்ளை நிறத்தில் இருக்கின்ற பற்கள். வயது ஆக ஆக அந்தப் பொலிவு குறைந்து கொஞ்சம் மஞ்சள் நிறத்துக்கு மாறும். எனாமல் எனும் வெளிபூச்சு தேய்ந்து டென்டின் எனும் உள்பகுதி வெளியில் தெரியத் தொடங்குவதே முதுமையில் ஏற்படுகிற பல்லின் நிறமாற்றத்துக்கு அடிப்படைக் காரணம். ஆனால், பலருக்கும் இளமையிலேயே பற்களின் நிறம் மாறிவிடுகிறதே, ஏன்? அதற்கான காரணங்களை இப்போது பார்ப்போம்.

### பற்கள் நிறமிழப்பது ஏன்?

பற்களைச் சுத்தமாகப் பராமரிக்கத் தவறுவது பற்களின் நிறமாற்றத்துக்கு முக்கியக் காரணம். எனாமலில் பற்காரை படிவதால் பல்லின் நிறம் மாறுகிறது. புகைப்பழக்கம், வெற்றிலை, பாக்கு, புகையிலை போடுவது, பான்மசாலா ஃ குட்காவைப் பயன்படுத்துவது போன்ற பழக்கங்கள் உள்ளவர்களுக்கு பற்களின் நிறம் காவி நிறத்துக்கு மாறும். காரணம், புகையிலையில் உள்ள நிகோடிட் ரசாயனத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக டென்டின் உறிஞ்சிக்கொண்டே இருக்கும். நாளடைவில் தன் இயல்பான நிறத்தை அது இழந்துவிடும்.

இனிப்புப் பண்டங்களை அதிகம் சாப்பிடுவதும், குளிர்பானங்களை அடிக்கடி அருந்துவதும் பற்களின் நிறம் மாறுவதற்குத் துணை செய்யும். கறுப்புச் சாக்லேட்டை அதிகமாகச் சாப்பிட்டால், காபி, கறுப்புத் தேநீர், சிவப்பு ஒயின் ஆகியவற்றை அதிக அளவில் குடித்தால் விரைவிலேயே பற்களின் நிறம் மாறிவிடும். காபியிலும் தேநீரிலும் உள்ள 'டானின்' ரசாயனம், ஒயினில் உள்ள 'பாலிபீனால்' எனும் ரசாயனம் இந்த நிறமாற்றத்தை ஏற்படுத்துகின்றன. சோயா சாஷ், விநீகர் போன்றவற்றை அளவுக்கு அதிகமாகப் பயன்படுத்தும்போதும் பற்களின் நிறம் மாறலாம். பல்லில் சொத்தை ஏற்படுவது, விபத்தில் அடிபடுவது போன்ற காரணங்களால் பற்கள் கறுப்பு நிறத்துக்கு மாறிவிடும்.

நாம் குடிக்கும் தண்ணீரிலும் பாலிலும் ஃபுளோரைடு அளவு அதிகமாக இருக்குமானால் 'டென்டல் ஃபுளுரோசிஸ்' (Dental Fluorosis) எனும் பிரச்சினை வரும். அப்போது பற்கள் அடர் மஞ்சள், காவிநிறம் என்று பல்வேறு நிறங்களில் காணப்படும். எனாமலில் மாநிறக்கோடுகள் அல்லது வெள்ளை நிறக்கோடுகள் பட்டை போட்டதுபோல் தெரியும்.

கருவுற்ற பெண்கள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் தாங்களாகவே டெட்ராசைக்ளின் போன்ற ஆன்ட்டிபயாட்டிக் மாத்திரைகளைச் சாப்பிடும்போது அவற்றின் பக்கவிளைவாக அவர்களுக்குப் பிறக்கும் குழந்தைக்குப் பற்களில் நிறமாற்றம் காணப்படும். இதுபோல் ரத்தசோகை நோய்க்கு இரும்புச் சத்து மாத்திரை மற்றும் டானிக்குகளைத் தொடர்ந்து நீண்ட நாட்களுக்குச் சாப்பிடும்போதும் பற்களின் நிறம் கறுப்பாக மாறும். குரோமோஜெனிக் பாக்டீரியா (Chromogenic bacteria) காரணமாகவும் பற்கள் நிறமிழக்கின்றன. இவ்வகை பாக்டீரியாக்கள் வளர்வதற்கு மன அழுத்தம் ஒரு முக்கியக் காரணியாக அறியப்பட்டுள்ளது.

### என்ன சிகிச்சை?

புகையிலை காரணமாக கறை படிந்த பற்கள் உள்ளவர்கள், டென்டல் ஃபுளுரோசிஸ் பிரச்சினை உள்ளவர்கள், மாத்திரை மருந்துகளால் பற்களின் நிறம் மாறியவர்கள் ஆகியோருக்குப் பற்களின் மஞ்சள் நிறத்தை மாற்றி வெள்ளை நிறத்துக்குக் கொண்டுவருவதற்கு 'டூத் ஒயிட்டனிங;' (Tooth Whitening) எனும் சிகிச்சைமுறை இப்போது செய்யப்படுகிறது.

இதை ஆறு மாதங்களுக்கு ஒருமுறை மீண்டும் மீண்டும் செய்துகொள்ள வேண்டும். அப்போதுதான் பற்களின் நிறம் வெள்ளை நிறத்தில் நிலைத்து நிற்கும். அப்படிச் செய்யும்போது ஒரு சிக்கல் உண்டாவதைத் தவிர்க்க முடியாது. அதாவது, அந்தப் பற்கள் விரைவிலேயே சிதைந்துவிடும். இப்பொழுது 'டென்டல் வெனீர;' (Dental veneers) சிகிச்சை பயன்பாட்டில் உள்ளது. இது பற்களைச் சிதைக்காமல் இயல்பான நிறத்தைத் தருகிறது.

### எங்கு செய்வது? யாருக்குச் செய்வது?

பற்களுக்கு அழகூட்டச் செய்யப்படும் இந்தச் சிகிச்சையை பலரும் அழகுநிலையங்களில் செய்துகொள்கிறார்கள். இன்னும் சிலர் இணையத்தில் படித்து 'ஒயிட்டனிங் கிட்' வாங்கித் தாங்களாகவே பற்களை அழகுபடுத்திக்கொள்கிறார்கள். இந்த இரண்டுமே தவறு.

இது, பல ரசாயனங்களைப் பயன்படுத்திச் செயற்கைமுறையில் செய்யப்படும் சிகிச்சை என்பதால், கடுமையான ஒவ்வாமை ஏற்பட்டு உயிருக்கு ஆபத்து நெருங்குவதற்கு அதிக வாய்ப்புண்டு. ஆகவே, தகுதி பெற்ற பல் மருத்துவரால் மட்டுமே இந்தச் சிகிச்சையைச் செய்யமுடியும். அப்படியும் இந்தப் பிரச்சினை உள்ள எல்லோருக்கும் இதைச் செய்யமுடியாது. யாருக்கு இதைச் செய்ய வேண்டும் என்பதை பல் மருத்துவர்தான் முடிவுசெய்ய வேண்டும். குறிப்பாக, கர்ப்பிணிகள் இதைச் செய்துகொள்ளக் கூடாது.

### தடுக்க வழி உண்டா?

'டூத் ஒயிட்டனிங்' சிகிச்சைக்குப் பதிலாக ஆண்டுக்கு ஒருமுறை 'ஸ்கேலிங்' என்ற முறையில் பற்களைச் சுத்தப்படுத்திக்கொள்ளலாம். இதன் மூலம் பல்லில் காரை படிதல், நிறமிழத்தல் போன்ற பிரச்சினைகள் தவிர்க்கப்படும். இதற்கு ஒவ்வாமை ஏற்பட வழியில்லை. பற்களுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படுவதில்லை. பற்கள் எளிதாக தங்கள் இயல்பான நிறத்துக்கு மாறிவிடும்.

(09ஆம் பக்கம் பார்க்க..)

காலைக்கதிர்
Kalaikkathir

# மக்களின் விருப்பத்திற்கேற்பவே அபிவிருத்தி கிராமங்கள் தோறும் கருத்துகள் பெறப்பட்டன

## இப்படிச் சொல்கிறார் அமைச்சர்' டக்ளஸ்

சுற்றறிக்கையில் கூறப்பட்டதற்கிணங்க யாழ் மாவட்டத்தில் உள்ள ஒவ்வொரு பிரதேச செயலகங்கள் ரீதியாக கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு மக்களின் விருப்புக கேற்ப அபிவிருத்தி திட்டங்கள் முன்மொழியப்பட்டு தெரிவுகள் திரட்டப்பட்டுள்ளன என அமைச்சர்' டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார். மேலும் கடந்த மூன்று வருடங்களாக பன்முகப்படுத்தப்பட்ட நிதி மாவட்டங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படாத நிலை இருந்தபோதும் இம்முறை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க யாழ்.மாவட்டத்திற்கென 322 மில்லியன் ரூபா நிதியை ஒதுக்கியுள்ளார்.

ஆனாலும் இந்த நிதி மிக சொற்பமானதாகவே உள்ளது. அதாவது சிறு விடயங்களை மேற்கொள்வதற்கான நிதியாகவே உள்ளது. அதற்கிணங்கவே இம்முறை பிரதேச செயலகங்களால் கிராமங்கள் தோறும் கூட்டங்கள் நடத்தப்பட்டு அப்பிரதேச மக்களின் நேரடித் தெரிவுகளாக திட்டங்களும் முன்மொழிவுகளும் திரட்டப்பட்டுள்ளன என்றும் சுட்டிக்காட்டியுள்ளார். தமது ஒப்புதல் இன்றி 2024 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் பன்முகப்படுத்தப்பட்ட நிதியில் மேற்கொள்ளப்படவுள்ள திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் சுட்டிக்காடடியதற்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். மேலும் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் ஜனாதிபதியுடன் நேரடியாகத் தொடர்புகளைப் பேணி வருபவர்கள் என்று சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, ஜனாதிபதிக்கு இவ்விடயம் தொடர்பில் தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் எழுத்திலும் அனுப்பியுள்ளார்கள். அதற்கு ஜனாதிபதியும் இணங்கியுள்ளார் எனத் தெரியவருகின்றது.

அதனடிப்படையில்தான் நான் கூறினேன் ஜனாதிபதிக்கு உங்களது தெரிவுகளை அனுப்புங்கள் அல்லது எம்மிடம் தாருங்கள் என்று. அத்துடன் குறித்த திட்டத்தில் தமது திட்டங்களும் உள்வாங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்வைத்துள்ளனர்.

அதனடிப்படையில் ஒரு வாரத்திற்குள் அவர்களது திட்டங்களையும் உள்வாங்கி உரிய தரப்பினர்களுக்கு வழங்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதனிடையே யாழ்ப்பாணம் மாவட்டத்திற்கான குடிநீர் விநியோகம் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் ஆராய்வதற்கென அமைச்சர் ஜீவன் தொண்டமானும் யாழ் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்திற்கு வருகைதந்திருந்தார். ஆனாலும் குடிநீர் பிரச்சினை, விவசாயத்துக்கான நீர் தொடர்பில் தீர்க்கமான தீர்வு எதுவும் எட்டப்படவில்லை. இதையடுத்து குறித்த விடயம் தொடர்பில் கூட்டத்தில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள் ,கமக்கார அமைப்புகள் பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் அடங்கிய குழுவினர் கொழும்பில் ஒரு கூட்டத்தில் கலந்து கொண்டு உரிய முடிவினை எடுப்பதாகவும் தீர்மானிக்கப்பட்டது. இதேவேளை இந்திய இழுவை மடி படகுகளை நிறுத்துவது தொடர்பில் ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. அத்துடன் இவ்விடயமே எமது கடற்றொழிலாளர்களுக்கு பாரிய பிரச்சினையாக இருப்பதாக சுட்டிக்காட்டிய அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எமது பிரதேச வளங்களை அழிகின்ற கடற்றொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை அழிக்கின்ற இந்தப் பிரச்சினைக்கு தீர்வுகாணத் தாம் பலதரப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார். அதன் ஒரு பகுதியாக கடற்பகுதியில் கண்காணிப்புப் பணிகளை தொடர்ந்து முன்னெடுக்குமாறும் கடற்படையினருக்கு அறிவுறுத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

குறித்த கூட்டத்தில் நீர் வழங்கல் மற்றும் பெருந்தோட்ட உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், சி.சிறிதரன், அங்கஜன் இராமநாதன், கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செ.கஜேந்திரன், யாழ்ப்பாண மாவட்ட செயலாளர் அம்பலவாணர் சிவபாலசுந்தரன், வடக்கு மாகாண சபை அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், திணைக்களங்களின் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், பொலிஸார், முப்படையினர், சமூகமட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் உட்படப் பலர் கலந்துகொண்டனர்.

(05)

# சம்மாந்துறை ஸம் ஸம் பாலர் பாடசாலை வித்தியாரம்ப விழா

(தில்சாத் பர்வீஸ்)

சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட உடங்கா 01 கிராம சேவையாளர் பிரிவில் அமைந்துள்ள ஸம் ஸம் பகல் பராமரிப்பு பாலர் பாடசாலையின் வித்தியாரம்ப விழா சம்மாந்துறை அல் அர்சத் பாடசாலை கலாசார மண்டபத்தில் வெள்ளிக்கிழமை இடம் பெற்றது.

மேலும் 2024 ஆம் ஆண்டில் புதிதாக இணைத்துள்ள மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் மற்றும் ஏடு திறப்பு போன்ற நிகழ்வுகளும் இடம் பெற்றமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ். எல். எம். ஹனீபா, அட்டாளைச்சேனை தேசியக் கல்வியியல் கல்லூரியின் விரிவுரையாளர் கே. எல். எம். பர்ஷாத் , சம்மாந்துறை அல் அர்சத் தேசிய பாடசாலையின் அதிபர் எம்.ஏ.ரஹீம், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் ஏ. சீ. எம். சஹீல் , மாணவர்களின் பெற்றோர்கள் ,ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

(05)

# மன்னார் மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்வு

(அஸ்ஹர் இப்றாஹிம்)



இந்த வருடத்திற்கான முதலாவது மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டம் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் கனகேஸ்வரனின் நெறிப்படுத்தலின் கீழ் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சரும் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருமான காதர் மஸ்தானின் தலைமையில் நாடாளுமன்ற உறுப்பினர்களான குலசிங்கம் திலீபன், ரிஷாத் பதியுதீன், சார்ள்ஸ் நிர்மலநாதன், செல்வம் அடைக்கலநாதன் ஆகியோரின் பங்கேற்போடு மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் சிறப்பாக இடம்பெற்றது.

குறித்த அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் சட்டவிரோத கடல் அட்டை, 'ஐ' செயத்திட்டத்தின் மூலம் பூரணப்படுத்தப்படாமல் உள்ள வீதிகள், காணிப் பிரச்சினைக்கான தீர்வைப் பெற்றுக் கொடுப்பது சம்பந்தமாகவும், வீதி அபிவிருத்தி சம்பந்தமாகவும், போக்குவரத்து, கால்நடைகளுக்கான மேய்ச்சல் தரை, கல்வி , சுகாதாரம், மீன்பிடி, நீர்ப்பாசனம்,போக்குவரத்து, இது போன்ற இதர விடயங்கள் தொடர்பிலும் விரிவாக ஆராயப்பட்டு தீர்வுகளும் எட்டப்பட்டன .

மேற்படி மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் பிரதேச செயலகங்களின் பிரதேசச் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள், முப்படை பிரதானிகள், அரச பதவிநிலை உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

(05)

முல்லை ஓய்வு நகர்
Mullai Rest City

எழுதுமட்டுவாழ் நகரில்
2 பரப்பு, 4 பரப்பு காணிகள் விற்பனைக்கு!

இயற்கையான சூழலில் உங்களின் ஓய்வுகாலத்தினை மகிழ்ச்சியாகவும் ஆரோக்கியத்துடனும் வாழுங்கள்!

உங்களுக்கு விரும்பியவாறு வீடுகளை அமைத்துக்கொள்ளலாம்.
மாசற்ற இயற்கையான சூழல் – பாரம்பரிய முறையிலான வாழ்க்கை – ஆரோக்கிய நிலையங்கள்
அத்தியாவசிய தேவைகள் அனைத்தும் அருகில் – பொழுதுபோக்கு அம்சங்கள்

முதியோர் பராமரிப்பு வசதி – தியான மண்டபம் – மூலிகைத்தோட்டத்துடன் மூலிகைக் குளியல்
அறிவார்ந்த நூல்கள் அடங்கிய நூலகம் – உள்ளூர் வானொலிச் சேவை
ஒன்றுகூடல் நிலையம் – பாரம்பரிய உணவகம் – பல்பொருள் அங்காடி
சுத்தமான குடிநீர் விநியோகம் – யோகா நிலையம்
விருந்தினர் விடுதி – சிறுவர் பூங்கா
ஆயுள்வேத சிகிச்சை நிலையம்
மீன்பிடி குளம் – தாரா பண்ணை
பூங்கா – நடைபயிற்சிப் பாதை – உடற்பயிற்சிக் கூடம்
உள்ளக விளையாட்டுத் தொகுதி – விளையாட்டு மைதானம்




4th Project

இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



தொடர்புகளுக்கு: 0777 43 5557


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 071 7354308
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chikne Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable In Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 80/=
Ice Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swabpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

# நாவிதன் வெளியில் அறநெறிப் பாடசாலை ஆசிரியர்களுக்கு விழிப்புணர்வு செயலமர்வு





(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

அம்பாறை மாவட்டத்தின் நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான விழிப்புணர்வு செயலமர்வு நாவிதன் வெளி பிரதேச செயலாளர் ஆர். ராகுலநாயகி தலைமையில் வெள்ளிக்கிழமை நாவிதன்வெளி கலாசார மத்திய நிலையத்தில் நடைபெற்றது.

அறநெறி பாடசாலை கல்வியின் அவசியம், தற்போது அறிமுகப்படுத்தப்பட்டிருக்கும் புதிய பாடத்திட்டம் தொடர்பில் விளக்கமளித்தல், அறநெறி பாடசாலைகளில் மாணவர்களை அதிகரிக்கச் செய்வதற்கான வழிமுறைகள் போன்ற பல்வேறு விடயங்கள் குறித்து ஆசிரியர்களுக்கு இங்கு விளக்கமளிக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் இந்து கலாசார திணைக்களத்தின் மாவட்ட உத்தியோகத்தர் கே ஜெயராஜ், நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் இந்து கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கே. நீலேந்திரன், திருமதி பா. சரோஜினி, மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் கலாசார உத்தியோகத்தர் திருமதி வி. நகுலநாயகி, கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல். எம்.ஷினாஸ் உட்பட அலுவலக உத்தியோகத்தர்கள், அறநெறி பாடசாலைகளில் கற்பிக்கும் ஆசிரியர்கள் எனப் பலர் இதில் கலந்து கொண்டனர். (05)

# ஐஸ்கிறீமுக்குள் தவளை: ரூ. 5000 தண்டம் விதிப்பு

யாழ்ப்பாணம் - செல்வ சந்நிதி ஆலய சூழலில் விற்பனை செய்யப்பட்ட குளிர்களிக்குள் (ஐஸ் கிறீம்) தவளை காணப்பட்டமை தொடர்பிலான வழக்கில் குற்றத்தை ஒப்புக்கொண்ட, விற்பனையாளருக்கு நீதிமன்றம் 5 ஆயிரம் ரூபா தண்டம் விதித்துள்ளது.

கடந்த புதன்கிழமை ஆலய சூழலில் குளிர்களி விற்பனையில் ஈடுபட்டவரிடம், அதனை வாங்கிய நபர் ஒருவரின் குளிர்களிக்குள் தவளை ஒன்று காணப்பட்டது.

அது தொடர்பில் சுகாதாரப் பிரிவினருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து , விசாரணைகளை முன்னெடுத்த வல்வெட்டித்துறை சுகாதார பரிசோதகர் ஐஸ் கிறீம் விற்றவருக்கு எதிராக பருத்தித்துறை நீதிவான் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

குறித்த வழக்கு வெள்ளிக்கிழமை விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது , குளிர்களியை விற்பனை செய்தவர், சுன்னாகம் பகுதியில் இயங்கும் குளிர்களி தயாரிப்பு நிறுவனத்திடம் கொள்வனவு செய்தே , ஆலய சூழலில் விற்பனை செய்ததாகத் தெரிவித்துள்ளார்.

அதனை அடுத்து விற்பனை செய்தவருக்கு 5 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டது.


இதேவேளை சந்நிதி ஆலய சூழலில் சுகாதார சீர்கேட்டுடன் நடத்தி செல்லப்பட்ட உணவகம் ஒன்றிற்கு எதிராக தொடரப்பட்ட வழக்கில் உணவக உரிமையாளருக்கு 36 ஆயிரம் ரூபா தண்டப்பணம் விதிக்கப்பட்டுள்ளது.

வரலாற்று சிறப்பு மிக்க சந்நிதி ஆலயத்திற்கு தினமும் வழிபாட்டிற்காகவும் , சந்நிதி ஆலயத்தில் நடைபெறும் திருமண நிகழ்வுகளுக்காகவும் பல நூற்றுக்கணக்கானவர்கள் வருகை தருகின்றனர்.

அவர்கள் ஆலய சூழலில் உள்ள உணவகங்களில் சிற்றுண்டிகள் , குளிர்பானங்களைக் கொள்வனவு செய்கிறனர். அதனால், ஆலய சூழலில் உள்ள உணவகங்கள் மற்றும் குளிர்பான விற்பனை நிலையங்களின் சுகாதாரத்தை சுகாதார பரிசோதகர்கள் கண்காணிக்க வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (05)

குறிஞ்சி மலை நகர் Kurinchi Hill City
கொழும்பு - மட்டக்களப்பு A4 வீதியில் 190 ஆவது km இல் 800 m தூரத்தில்
பதுளை மாவட்டம் ஹல்துமுல்லை பிரதேச செயலர் பிரிவு
15 பேர்ச் முதல் 40 பேர்ச் வரையான காணித்துண்டுகள் விற்பனைக்கு!
சுற்றுலா விடுதி, விடுமுறை வீடு ஆகியவற்றுடன் தேயிலை, கோப்பி, கறுவா பயிர்ச்செய்கையும்

அருகில் உள்ள சுற்றுலா மையங்கள்
(100கிமீ சுற்றுவட்டாரத்தில்)



பம்பரகந்த, தியலும, துன்கிந்த, இராவணா,
ரம்போடை உட்பட 10இற்கும் மேற்பட்ட நீர்வீழ்ச்சிகள்
தேசிய சரணாலயங்கள் மற்றும் பூங்காக்கள்
Horton Plains National Park, Hakgala Botanical Gardens
Victoria Park, Kande Ela Educational Forest Park
Lunugamvehera National Park, Yala National Park
Udawalawe National Park
கதிர்காமம் முருகன் கோவில், சீதா அம்மன் ஆலயம்,
ரம்போடை ஆஞ்சநேயர் கோவில்



தொடர்புகளுக்கு: 0777 43 5557

தனியான வாகன தரிப்பிட வசதி
முழுமையான 24 மணிநேர பாதுகாப்பு சேவை
தொடர்ச்சியான பராமரிப்பு ஏற்பாடு
மின்சார இணைப்பு ஏற்பாடு - குடிதண்ணீர் வசதி
உணவகம் - உள்ளக விளையாட்டுத்திடல்
தேயிலை, கோப்பி, கறுவா தொழிற்சாலைகள்
சுற்றுலா ஏற்பாடுகள்

பேர்ச் 250,000/-
பரப்பு 25இலட்சம்

5th Project
இது ஒரு கற்பகவனம் செயற்திட்டம்
Good Gift Property Developers (Pvt) Ltd



## சுற்றுலாத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேரடியாக விஜயம் செய்திருந்தார்.

இதன்போது சுற்றுலாத் துறையினர் சுட்டிக்காட்டிய பிரச்சினைகளுக்கு உரிய அதிகாரிகளைத் தொலைபேசியூடாக தொடர்பு கொண்டு உடனடியாக தீர்வுகளைப் பெற்றுக்கொடுத்த ஜனாதிபதி, சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான யோசனைகளையும் கேட்டறிந்து கொண்டார்.

கொவிட் - பொருளாதார நெருக்கடியின் விளைவாக இந்நாட்டின் சுற்றுலாத்துறை பெரும்சரிவை சந்திருந்த நிலையில், அரசாங்கத்தின்புதியதிட்டமிடல்களின் பலனாக தற்போது நாட்டிற்கு வரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது.

அதன்படி 2023 ஆம் ஆண்டில் 7,489,000 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்திருப்பதோடு, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் அது இரட்டிப்புத் தொகையாகும்.

2017 ஆம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்திருக்கும் நிலையில் அந்த இலக்கையும் கடந்து செல்லும் 2024 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டமிடலை அரசாங்கம் கொண்டுள்ளது.

அதேபோல் நாளாந்தம் 500 டொலர்களைச் செலவிடும் சுற்றுலாப் பயணிகளுக்கு மாறாக அதனை விடவும் அதிக தொகையைச் செலவிடக்கூடிய உயர்மட்ட சுற்றுலா பயணிகளை நாட்டுக்கு அழைத்து வருவதற்காக சுற்றுலாத்துறையின்உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்கான திட்டங்களையும் அரசாங்கம் ஆரம்பித்துள்ளது.

ஆளும் தரப்பின் புதிய வேலைத்திட்டம்தொடர்பில்ஜனாதிபதி சுற்றுலா வர்த்தகச் சமூகத்திற்கு அறிவுறுத்தியதன் பின்னர் புதிய வேலைத்திட்டத்தின்ஊடாகதங்களது வர்த்தகச் செயற்பாடுகளில் புதிய பரிணாமத்தை எட்டியிருப்பதாக வர்த்தகர்கள் சுட்டிக்காட்டினர்.

சீனிமோதர, திக்வெல்ல, நில்வெல்ல, ஹிரிகெட்டிய, வெலிகம, ஹபராதுவ பகுதிகளில் அமைந்திருக்கும் சுற்றுலா ஹோட்டல்கள் மற்றும் வெலிகம - அலைச்சறுக்கு பயிற்சிகல்லூரிக்கும்விஜயம்செய்து அதன் செயற்பாடுகளை ஜனாதிபதி நேரில் ஆராய்ந்தார்.

பின்னர் உடவடுன சுற்றுலா வலயத்தில்சுற்றுலாப்பயணிகளுடன் சிநேகபூர்வமாக கலந்துரையாடிய ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, சுற்றுலாத்துறை மேம்பாட்டுக்கான அவர்களது யோசனைகளையும் கேட்டறிந்துக்கொண்டார். அதனையடுத்து காலி - தங்காலை கடற்கரைகளில் கூடியிருந்த உள்நாட்டுசுற்றுலாபயணிகளுடன் கலந்துரையாடிய ஜனாதிபதி, தனது வருகையை அறிந்து வீதியின் இரு பகுதிகளிலும் கூடியிருந்த மக்களுடனும் சிநேகபூர்வமாக கலந்துரையாடினார்.

இந்நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளுக்கு புதிய அனுபவங்கள் பலவற்றைபெற்றுகொடுப்பதற்கான முயற்சிகளில் பல காலமாக ஈடுபட்டு வரும் துநககசல னுழுடிடிள என்பவரும் ஜனாதிபதியுடன் இந்த சுற்றுப் பயணத்தில் கலந்துகொண்டார்.

## போராட்டத்திற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அழைப்பு விடுத்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று செய்தியாளர்களைச் சந்தித்த அவர், தொடர்ந்துகருத்துத்தெரிவிக்கையில் காணாமல் ஆக்கப்பட்டோரின் போராட்டம் தொடங்கி 7 ஆண்டுகள் நிறைவடைந்து எட்டு ஆண்டுகள் ஆகின்றன. எங்களுடைய பிள்ளைகளுக்கு இலங்கை அரசு நீதி வழங்காது என்பதால், சர்வதேசத்திடம் நீதியை வேண்டி நிற்கின்றோம். அதற்காகவே இந்தப் போராட்டம் என்றார் (316)



காலைக்கதிர் Kalaikkathir

# 6 குளங்களில் இரண்டு லட்சத்து 35 ஆயிரம் இறால் குஞ்சுகள் வவுனியாவில் விடப்பட்டன





வவுனியா, ஆசிக்குளம் கிராம சேவகர் பிரிவில் உள்ள 06 குளங்களுக்கு 2 லட்சத்து 35,000 இரால் குஞ்சு விடும் நிகழ்வு நேற்று (சனிக்கிழமை) இடம்பெற்றது.

கமத்தொழில் மற்றும் பெருந்தோட்டத்துறை அமைச்சால் முன்னெடுக்கப்பட்டு வரும் சிறியளவிலான விவசாய, வணிக மீண்டெழல் திட்டத்தின் கீழ் ஆசிகுளம் கிராம சேவையாளர் பிரிவிற்குப்பட்ட 06 குளங்களில் இறால் குஞ்சுகள் விடும் செயற்பாடு முன்னெடுக்கப்படவுள்ளது.

இதன் அங்குரார்பண நிகழ்வு வவுனியா, கோமரசன்குளத்தில் இடம்பெற்றிருந்தது. இதன்போது கோமரசன்குளத்திலே ஐம்பதாயிரம் இறால் குஞ்சுகள் பிரதம விருந்தினர்களால் விடப்பட்டிருந்தன.

இந்தத் திட்டத்தின் இணைப்பாளர் எஸ்.ஏச்.ஏ.அஸ்ரவ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் பீ.ஏ.சரத்சந்திர, மேலதிக அரசாங்க அதிபர் தி.திரேஸ்குமார், மாவட்ட விவசாய பணிப்பாளர் திருமதி ஈஸ்வரன், மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் வி.முகுந்தன், மாகாண பிரதி விவசாய பணிப்பாளர் அற்புதச்சந்திரன், தேசிய நீர் உயிரினச் செய்கை அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரி யோ.நிசாந்தன் மற்றும் பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். (05-100)

# ஏ.ஆர். மன்சூர் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் மாபெரும் சிரமதானம்

(எஸ்.அஷ்ரப்கான்)

ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஏற்பாட்டில் 'சுத்தமான சூழலை நோக்கி' எனும் தொனிப் பொருளில் மாபெரும் சிரமதான பணி கல்முனை ஹுதா ஜ/ம்ஆ பள்ளிவாசல் வளாகத்தில் நேற்று (சனிக்கிழமை) காலை 06 மணிக்கு இடம்பெற்றது.

ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேஷனின் ஸ்தாபக தலைவி சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனின் தலைமையில் இடம்பெற்ற இச்சிரமதான பணியில் அமைப்பின் முகாமையாளர் டாக்டர் எஸ்.நளிமுதீன் ஆகியோருடன் அமைப்பின் உறுப்பினர்களும் கலந்து கொண்டு இச்சிரமதானத்தை ஆரம்பித்து வைத்தனர்.

கல்முனை மாநகர சபை சுகாதர பிரிவினர், கல்முனை ஹுதா ஜ/ம்மா பள்ளிவாசல் தலைவர் உட்பட நிர்வாகத்தினர் மற்றும் தஃவா குழு உறுப்பினர்களின் பங்குபட்டுதலுடன் இடம்பெற்ற குறித்த சிரமதான பணியில் கல்முனை பிராந்திய சுகாதார பணிமனையின் பொதுச்சுகாதார பரிசோதகர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் மீனவர்கள் என பலரும் கலந்துகொண்டு சிரமதான பணியை முன்னெடுத்தமை குறிப்பிடத்தக்கது.

கல்முனைப் பிரதேசத்தில் உள்ள பொது இடங்களை சுத்தமுள்ள சுகாதாரமிக்க சுத்தமான காற்றை சுவாசிக்கக் கூடிய இடமாக மாற்றுவதற்கான முயற்சியில் ஏ.ஆர்.மன்சூர் பவுண்டேசன் ஈடுபட்டு வருகின்றமை வரவேற்கத்தக்கது. (05)

# பற்கள் நிறம் மாறுவது........

(4ஆம் பக்கத் தொடர்ச்சி...)

டென்டல் ஃபுளுரோசிஸ் பிரச்சினை உள்ளவர்கள் பல் மருத்துவர் ஆலோசனைப்படி ஃபுளுரைடு பற்பசைகளைப் பயன்படுத்த வேண்டும். குடிக்கும் தண்ணீரில் ஃபுளுரைடு தாது அதிகமாக இருந்தால் அந்தத் தண்ணீரை அப்படியே குடிக்கக் கூடாது. ஒரு லிட்டர் குடிநீரில் அலுமினியம் சல்பேட் (Alum) 12.8 கிராம், கால்சியம் ஆக்சைடு (Lime) 6.4 கிராம் கலந்து 10 நிமிடங்களுக்கு நன்கு கலக்க வேண்டும். மூன்று மணி நேரம் கழித்து அந்தத் தண்ணீரை மெல்லிய துணியில் வடிகட்டி பயன்படுத்த வேண்டும். இதன் மூலம் ஓரளவிற்கு ஃபுளுரைடு தாதுவைக் குடிநீரில் குறைத்துவிட லாம். டென்டல் ஃபுளுாரோசிஸ் பாதிப்பு வராமலும் பார்த்துக்கொள்ளலாம். புகைப்பழக்கம், புகையிலை போடுதல் இந்த இரண்டையும் கைவிட வேண்டும். குளிர் பானங்கள், கோலா பானங்கள் குடிப்பதை அவசியம் தவிர்க்க வேண்டும். பதப்படுத்தப்பட்ட உணவுகளை அடிக்கடி சாப்பிட வேண்டாம். மது வேண்டவே வேண்டாம்.

சாக்லேட், இனிப்பு மாவு மற்றும் சர்க்கரை கலந்த இனிப்புகளைச் சாப்பிட்ட பிறகு வாயை நன்றாகக் கொப்பளியுங்கள். அல்லது காரட், ஏதாவது ஒரு பழம் சாப்பிடுங்கள். இதன் பலனால் பற்களில் ஒட்டியிருக்கிற சர்க்கரைப் படலம் எளிதாக நீங்கிவிடும். காறை படிவது தடுக்கப்படும்.

'பளிச்' பற்களுக்கான ஊடக விளம்பரங்களைப் பார்த்து தினமும் புதிது புதிதாக பற்பசைகளை வாங்கிப் பயன்படுத்தாதீர்கள். பல பற்பசைகளில் 'பிளீச்சிங்' ரசாயனங்கள்தான் உள்ளன. இவற்றால் சில நாட்களில் பற்கள் வெண்மையானதுபோல் தோன்றலாம். ஆனால், நாளடைவில் எனாமல் கரைந்து பற்கள் சேதமடையவே வாய்ப்புகள் அதிகம்.

ஒரு நாளைக்கு இரண்டுமுறை பல் துலக்க வேண்டும். மிருதுவான பல்துலக்கியில் பட்டாணி அளவுக்குப் பற்பசை எடுத்துக்கொண்டு அதிகபட்சம் ஐந்து நிமிடங்களுக்குப் பல் துலக்கினால் போதும். அதிக நேரம் துலக்குவதாலோ, அழுத்தமாகத் துலக்குவதாலோ அதிக பற்பசைகொண்டு துலக்குவதாலோ பற்கள் வெள்ளை நிறத்துக்கு மாறிவிடாது. ஜெல் பற்பசை மற்றும் பல்வேறு நிறங்களில் உள்ள பற்பசையைப் பயன்படுத்த வேண்டாம். வெள்ளை நிறத்தில் இருக்கும் பற்பசையை மட்டுமே பயன்படுத்துங்கள். மருத்துவரின் பரிந்துரை இல்லாமல் நீங்களாகவே மருந்து, மாத்திரைகளை வாங்கிச் சாப்பிடாதீர்கள்.

### ஃபுளுரைடு பற்பசை அவசியமா?

ஃபுளுரைடு தாது இருமுனைக் கத்தி போன்றது. இது உடலில் குறைந்தாலும் குற்றம். அதிகமானாலும் ஆபத்து. இது தண்ணீரிலும் இருக்கிறது நாம் சாப்பிடும் பல உணவுகளிலும் இருக்கிறது. சமச்சீரான உணவைச் சாப்பிடுவோருக்கு அவரவர் தேவைக்கேற்ப உணவிலிருந்தே இது கிடைத்துவிடும். ஆகவே, ஃபுளுரைடு கலந்த பற்பசை எல்லோருக்கும் தேவையில்லை. ஆனால், இன்றைய ஊடகங்களில் வரும் பற்பசை விளம்பரங்களோ எல்லோருக்கும் ஃபுளுரைடு பற்பசை அவசியம் என்றுதான் பாடம் நடத்துகின்றன.

உங்களுக்கு ஃபுளுரைடு பற்பசை அவ சியமா இல்லையா என்பதைத் தெரிந்துகொள்ள ஒரு எளிய வழியைச் சொல்லலாம். உங்கள் ஊர்த் தண்ணீரில் ஃபுளுரைடு எந்த அளவில் இருக்கிறது என்பதை ஊராட்சி, நகராட்சி அல்லது மாநகராட்சி அலுவலக மருத்துவ மையத்தில் கேட்டுத் தெரிந்துகொள்ளுங்கள். குடிநீரில் 1 பி.பி.எம். அளவுக்கு மேல் ஃபுளுரைடு இருந்தால் ஃபுளுரைடு பற்பசை தேவையில்லை 0.7 பி.பி.எம். அளவுக்குக் குறைந்தால் ஃபுளுரைடு பற்பசையைப் பயன்படுத்தலாம். இந்தியாவைப் பொறுத்தவரை 7 வயதுக்கு உட்பட்ட குழந்தைகளுக்கு ஃபுளுரைடு பற்பசை தேவையில்லை என்று உலக சுகாதார நிறுவனம் (WHO) அறிவுறுத்தியுள்ளது.

ஃபுளுரைடு பற்பசை'யில் 700 பி.பி.எம். அளவுக்கு ஃபுளுரைடு உள்ளது. பொதுவாகவே சிறு குழந்தைகள் பற்பசையைப் பயன்படுத்தும்போது சரியாக வாயைக் கழுவ மாட்டார்கள். இதனால், பற்களில் ஃபுளுரைடு தேங்கும். மேலும், பல குழந்தைகள் பற்பசையை விழுங்கிவிடுவார்கள். இதனால் வயிற்றுக்கோளாறுகள் வரும். இந்தப் பழக்கம் நீடித்தால், இவர்களுக்கு நிலைப்பற்கள் முளைக்கும்போது 'டென்டல் ஃபுளுாரோசிஸ்' பாதிப்பு வந்து பற்கள் நிறமிழக்கலாம். இதனைத் தவிர்க்கவே இந்த எச்சரிக்கை.

## பொறுப்புக்கூறல்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான புதிய அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவின் நிர்வாகத்தின் கீழாக இலங்கையானது மனித உரிமைகள் விடயத்தில் வேகமாக பின்நோக்கிச் செல்கின்றது.

விக்கிரமசிங்கவின் அரசாங்கம் 'காணாமல் போனவர்களின்' குடும்பங்களுக்கு பதில்களை வழங்குவதாகவும், துஷ்பிரயோகங்களில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இழப்பீடுகளை வழங்குவதாகவும் உறுதியளித்தது.

அத்துடன், அரசாங்கத்தின் நடவடிக்கைகள் தொடர்ந்து சர்வதேச கவனத்தின் அவசியத்தை வெளிப்படுத்துகின்றன. இலங்கையில் உண்மை, ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்திற்கான ஆணைக்குழுவின் சட்ட மூலத்தை, உள்நாட்டுப் போர் அட்டூழியங்களுக்குத் தீர்வு காண்பதாகக் கூறப்படும் நிலையில், அதிகாரிகள் தொடர்ந்தும் மௌனமாகவும், காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களை கையாள்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேநேரம், இந்த ஆண்டில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கு அரியல் அமைப்பின் ஊடாக அதிகாரம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அவர் மக்களை அடக்குறைக்கு உட்படுத்தும் அடைக்குமுறைச் சட்டத்தினை அமுலாக்குவதற்கு தயாராகியுள்ளார்.

அத்துடன், 1990 களில் இருந்து தொடர்ந்து வந்த இலங்கை அரசாங்கங்கள் மனித உரிமை மீறல்கள் மற்றும் போர்க்குற்றங்கள் குறித்து ஆராய குறைந்தது 10 ஆணைக்குழுக்களை நியமித்துள்ளன.

அந்த வகையில் தற்போதைய புதிய சட்டங்கள்; வெறுமனே முந்தைய தோல்வியுற்ற முயற்சிகளை பிரதிபலிப்பதோடு பாதிக்கப்பட்டவர்களின் தேவைகளைப் புறக்கணித்துள்ளதோடு இலங்கையின் சர்வதேச சட்டக் கடமைகளை நிறைவேற்றுவதில் மிகவும் பின்தங்கிய செயற்படுகளையே வெளிப்படுத்துவதாக உள்ளது என்றுள்ளது.

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வருடங்களுக்கு முன்னரான இந்நாட்டின் நிலைமையை நாம் மறந்துவிட முடியாது. அப்போது, எரிவாயு வரிசைகளிலும், எரிபொருள் வரிசைகளிலும் மக்கள் நேரத்தை செலவிட வேண்டியிருந்தது. மருந்துகள் கிடைக்கவில்லை, வாழ்க்கைச் சூழல் மிகக் கடினமானதாக மாறியிருந்தது.

அந்த நேரத்தில் நாடு முழுமையாக வங்குரோத்து நிலையில் காணப்பட்டது. ஆட்சியைக் கொண்டு நடத்துவதற்கு ஒரு சதம் கூட வருமானம் இருக்கவில்லை. எரிபொருள், எரிவாயு இறக்குமதிக்கும் பணம் இருக்கவில்லை. அதனால் மக்கள் வீதியிலிறங்கி போராடிய போதிலும் நாளடைவில் அவை சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து அரச சொத்துகளுக்குப் பெரும் சேதத்தை ஏற்படுத்துதாக மாறியிருந்தது.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நாட்டைப் பொறுப்பேற்ற ஓரிரு வாரங்களின் பின்னர் நாட்டில் சட்டம் ஒழுங்கு மீண்டும் நிலை நாட்டப்பட்டது. நிதி நெருக்கடிக்கு ஓரளவு தீர்வு காணப்பட்டதுடன், எரிபொருள், எரிவாயு, மருந்து உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை பெற்றுக்கொடுப்பதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டன. அந்த தருணத்தில் உரம் கிடைத்திருக்காவிட்டால் விவசாயத்துறை சரிவடைந்திருக்கும்.

இரண்டு முக்கிய காரணிகள் நாட்டின் பொருளாதார வீழ்ச்சிக்கு வழிவகுத்தன. முதலாவதாக உரக் கொள்கையால் விவசாயத் துறை வீழ்ச்சியை நோக்கிச் சென்றது. இரண்டாவதாக வரி குறைக்கப்பட்டதால் அரசாங்க வருமானம் குன்றியது. தேர்தல் குறித்த நோக்கத்தில் மாத்திரமே எடுக்கப்பட்ட முடிவுகளே இந்த நிலைக்கு வழிவகுத்திருந்தாலும் பிற்காலத்தில் வெளிநாடுகளிலிருந்து கிடைத்த உதவியால் அவற்றுக்குத் தீர்வைக் காண முடிந்தது.

பின்னர் நாட்டின் பொருளாதாரத்தை ஸ்திரப்படுத்தும் வகையில் சர்வதேச நாணய நிதியத்துடன் இணைந்த வேலைத்திட்டத்திற்கு செல்ல ஜனாதிபதி தீர்மானித்தார். சர்வதேச நாணய நிதியத்துடனான நீண்ட கலந்துரையாடலின் பின்னர் அழுத்தங்களைக் குறைத்து அந்த வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு இணக்கம் காணப்பட்டது. அதன்படி அரசாங்கத்தின் வருமானத்தை அதிகரிப்பதற்காக வரிக்கொள்கையில் மாற்றம் செய்யப்பட்டது.

ரூபாயின் பெறுமதி வீழ்ச்சியால் நாட்டு மக்களின் வாழ்க்கைச் சுமை அதிகரித்தது. இதன் மூலம் வரியை உயர்த்தினால் மக்கள் பாதிக்கப்படுவார்கள். ஆனால், அவ்வாறு செய்யாவிட்டால் நாட்டை எந்த வகையிலும் முன்னோக்கி கொண்டுசெல்ல முடியாத நிலைமை காணப்பட்டது. ஆனால் இந்த கஷ்டங்களை இரண்டு மூன்று வருடங்கள் தாங்கினால் இயல்பு நிலைமை ஏற்படும். அதன்படியே, சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்துகொண்டு

தொடர்ச்சி 11ம் பக்கம்....

காலைக்கதிர் Kalaikkathir

# சேவை நயப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கல்லாற்று பிராந்திய நிலைய பொறுப்பதிகாரி விஜயரெத்தினம் விஜயசாந்தனுக்கு சேவை நலன் பாராட்டு விழா நடைபெற்றது.

கல்லாறு நிலைய பொறுப்பதிகாரி பொறியியல் உதவியாளர் விஜயரெத்தினம் விஜயசாந்தன் கல்லாறு பணிமனையில் இருந்து காரைதீவு பணிமனைக்கு இடமாற்றம் பெற்றதையடுத்து இச் சேவைநலன் பாராட்டு விழா கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இந்த வேளையில் கல்லாறு தேசிய நீர் வழங்கல் வடிகால் அமைப்பு சபையின் கல்லாறு நிலைய அலுவலக உத்தியோகத்தர்களால் விஜயசாந்தனுக்கு சேவை நலம் பாராட்டு விழா சிறப்பாக இடம்பெற்றது.

மேலும் இடமாற்றம் பெற்றுச் செல்லும் உத்தியோகத்தர்களுக்கும் சேவைநலன் பாராட்டு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் முன்னாள் ஓய்வு நிலை நிலையப்பொறுப்பதிகாரி பொறியியல் உதவியாளர் ஏகாம்பரம் அருள்பிரகாசமும் கலந்து சிறப்பித்தார். (05)



# மட்டக்களப்பு தன்னாமுனையில் விபத்து காத்தான்குடியை சேர்ந்த ஒருவர் இறப்பு

## மேலும் 3 பேர் வைத்தியசாலையில்

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மட்டக்களப்பு - தன்னாமுனை பிரதான வீதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் ஓட்டோவில் பயணித்தவர்கள் காயம் அடைந்துள்ளனர் எனவும் மட்டக்களப்பு போதனா வைத்திய சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

காத்தான்குடியை சேர்ந்த ஓட்டோவே இந்த விபத்தில் சிக்கி உள்ளது.

மேற்படி விபத்தில் ஓட்டோவில் பயணித்த காத்தான்குடி - சேகுலபலாஹ் வீதியை சேர்ந்த றஹீம் என்பவர் உயிரிழந்துள்ளதுடன் - குழந்தை, பெண் உப்பட மேலும் 3 பேர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சை பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளனர். (05)




# யாழ். போதனா வைத்தியசாலையில் டிஜிற்றல் தொடு திரைப் பயன்பாடு

## வெள்ளிக்கிழமை முதல் அறிமுகம்



யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நோயாளர்களின் அசௌகரியங்களை தவிர்க்கும் பொருட்டு டிஜிற்றல் தொடு திரை, விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவு பகுதிக்கு முன்னால் வெள்ளிக்கிழமை மதியம் 2.30 மணிக்கு திறந்துவைக்கப்பட்டது.

இவ் டிஜிற்றல் தொடுதிரையில் பொதுமக்கள் வைத்தியசாலை தொடர்பான தவல்கள் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். மேலும் இவ் தொடுதிரை வைத்தியசாலையில் ஏழு இடங்களில் காசிப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (05)

# அனர்த்த பாதுகாப்பு அவசர செயற்பாடு ஏற்பாடுகள் குறித்துக் கலந்துரையாடல்

## தேசிய சாரணர் ஜம்போரிக்காக

(ஹஸ்பர் ஏ.எச்)



தேசிய சாரணர் ஜம்போரிக்கான அனர்த்த பாதுகாப்பு மற்றும் அவசர செயற்பாட்டுத்திட்ட ஏற்பாடுகள் குறித்த கலந்துரையாடலானது திருகோணமலை மாவட்ட செயலக உப ஒன்றுகூடல் மண்டபத்தில் (15) திருகோணமலை மாவட்ட அரசாங்க அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

தேசிய சாரணர் ஜம்போரியின் பாதுகாப்பு ஏற்பாடுகள் பற்றிய சுருக்கமான அறிமுகம், அவசர நடவடிக்கைக்கான ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள் மற்றும் ஏனைய பங்குதாரர்களின் மதிப்பாய்வு மற்றும் கடமைகள் போன்ற விடயங்கள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டது.

மேலும், எதிர்பார்க்கப்படும் அபாயங்கள், அவசரநிலை மற்றும் பாதுகாப்பு, அவசர ஒருங்கிணைப்பு, வானிலை கண்காணிப்பு மற்றும் முன்னெச்சரிக்கை முறைமை, பேரிடர்களுக்கான வெளியேற்ற மையங்கள், மருத்துவ வசதிகள் மற்றும் முதலுதவி, தீ பாதுகாப்பு நடவடிக்கைகள், அவசர உபகரணங்கள் மற்றும் பொருள்கள், முக்கிய அவசர வசதிகள் மற்றும் பொறுப்புகள் போன்ற பல விடயங்கள் இதன்போது கலந்துரையாடப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் மேலதிக அரசாங்க அதிபர் ஜே.எஸ்.அருள்ராஜ், மாவட்ட அனர்த்த முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் குகதாஸ் சுகுணதாஸ், நிர்வாக உத்தியோகத்தர் எஸ்.ஆர்.கே.எஸ்.குருகுலசூரிய, குறித்த துறைசார் அதிகாரிகள், முப்படைகளின் பொலிஸ் மற்றும் துறைசார் உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# மூதூர் தக்வா நகர் பிரதேச கடலரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கை மும்முரம்



(கே எ ஹமீட்)

மூதூர் கடற்கரைப் பிரதேசங்களில் ஏற்பட்டிருந்த கடலரிப்பைத் தடுப்பதற்கான நடவடிக்கை ஏற்கனவே எடுக்கப்பட்டு தக்வா நகர் தவிர ஏனைய பிரதேசங்களுக்கு தடுப்புச்சுவர் போடப்பட்டுள்ளது.

தக்வா நகர் பிரதேசத்திற்கு தடுப்புச்சுவர் அமைப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுவருகிறது. உரிய இடத்தை வெள்ளிக்கிழமை காலை 7. 30 மணியளவில் மீன்பிடித் திணைக்கள திருகோணமலை உதவிப் பணிப்பாளருடன் பார்வையிட்டபோது, இதன் போது மூதூர் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் மத்திய குழு தலைவர் ஜவாத் அவர்களும் கலந்துகொண்டார். (05)

# கம்பரெலிய மற்றும் சப்ரிகம எதேச்சாதிகாரத் திட்டம்!

நல்லாட்சி என கூறப்பட்ட ஆட்சிக்காலத்தில் கம்பரெலிய மற்றும் சப்ரிகம போன்ற திட்டங்கள் மக்களின் விருப்பகளுக்கு அப்பால் வடக்கு அரசியல்வாதிகளின் தனிப்பட்ட எதேச்சாதிகாரமான தெரிவாகவே இருந்தன. ஜனாதிபதி செயலகத்தால் தற்போது வடக்கு அபிவிருத்திக்கென தரப்பட்ட நிதி யாழ். மாவட்டத்தின் 435 கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அந்தந்த பகுதி சமூக மட்ட அமைப்புகள் மற்றும் அப்பகுதி மூத்த மக்கள் பிரஜைகள் மூலம் வெளிப்படையாக அரச அதிகாரிகள் முன்னிலையில் தெரிவுசெய்யப்பட்டிருந்தன.

ஆயினும் இன்றைய யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் இது தொடர்பாக ஏனைய நாடாளுமன்ற உறுப்பினர்கள் தமக்குத் தெரியாமல் திட்டங்கள் தயாரிக்கப்பட்டன என அப்பட்டமான பொய்யை உரைத்திருந்தார்கள்.

உண்மையில் நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய பிரதிநிதிகளும் குறித்த அபிவிருத்திக்குத் தெரிவான கட்டங்களில் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் திட்டங்களையும் முன்வைத்திருந்தனர்.

குறிப்பாக வலிகாமம் வடக்கு பிரதேச செயலகத்தில் கிராம ரீதியாக தெரிவுசெய்யப்பட்ட திட்டங்களை ஆராய்ந்து அங்கீகரிக்கும் கூட்டத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் பிரதிநிதியாக வலி. வடக்கு முன்னாள் தவிசாளர் சுகிர்தனும், தமிழ் மக்கள் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரனின் பிரதிநிதியும் கலந்துகொண்டு தமது கருத்துக்களையும் முன்வைத்திருந்தனர்.

ஆனால் இங்கு நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் தமக்கு இந்த விடயம் காலதாமதமாக அறிவிக்கப்பட்டதாகக் கூறியுள்ளார். அவ்வாறாயின் காலதாமாக அறிவிக்கப்பட்டிருப்பின் உடனடியாகவே சம்பந்தப்பட்ட பிரதேச செயலகங்களுக்கோ அரச அதிபருக்கோ தமது காரணங்களைத் தெரிவித்திருக்க வேண்டும்.

மாறாக மக்களின் தெரிவுகளாக முன்வைக்கப்பட்டுள்ள அபிவிருத்திகளை முடக்கும் நோக்குடன் கூட்டத்தில் தமது மலினமான அரசியலை வெளிப்படுத்தியிருந்தனர் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

காலைக்கதிர்
Kalaikkathir

## பொருளாதார...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கமைவானவேலைத்திட்டத்தை ஆரம்பித்தோம்.

மற்ற நாடுகள் சர்வதேச நாணய நிதியத்துடன் ஒப்பந்தம் செய்து கொள்ள நீண்ட காலம் சென்றது. ஆனால் நமது நாடு விரைவில் ஒப்பந்தம் செய்து கொண்டதன் காரணமாக சர்வதேச சமூகத்திற்கு எம் மீது நம்பிக்கை ஏற்பட்டது. எமது நாட்டின் பொருளாதாரத்தை மாற்றியமைக்க முடியும் என சர்வதேச நாணய நிதியம் எமக்கு வழங்கிய உத்தரவாதம் எமக்குச் சாதகமாக அமைந்தது. அதன்படி, பலபுதியசீர்திருத்தங்களுடன்அடுத்த திட்டத்தைச் செயல்படுத்தினோம். சர்வதேச நாணய நிதியம் மற்றும் ஏனைய சர்வதேச நிதி நிறுவனங்களுடன் மக்கள் எதிர்நோக்கும் சிரமங்கள் குறித்து கலந்துரையாடி நிவாரணம் பெற்றுக்கொடுக்கும்முயற்சிகளையும் முன்னெடுத்தோம்.

அதன்படி செயல்படுத்தப்படும் ஒரு முக்கிய திட்டமாக 'அஸ்வெசும' உள்ளது.எதிர்காலத்தில்இத்திட்டத்தை மேலும் பலப்படுத்த முடியும் என்று கருதுகிறேன். இத்திட்டத்தின் மூலம் மக்களின் நிதி நெருக்கடிகளை ஓரளவுக்குத் தீர்க்க முடியும். திட்டத்தினால் பயனடைவோரின் எண்ணிக்கையை 24 இலட்சமாக உயர்த்தவும்தீர்மானிக்கப்பட்டுள்ளது.

சமுர்த்தி திட்டத்தை விடவும் மூன்று மடங்கு அதிகமான தொகையை இதற்காக ஒதுக்கினோம். இத்தொகைபயனாளிகளின் கணக்கில்நேரடியாகவைப்பிலிடப்படுகிறது. எதிர்காலத்தில் டிஜிட்டல் மயமாக்கலுடன் இந்த திட்டத்தை மேலும் பலப்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது.

கர்ப்பிணி தாய்மாருக்கு சத்துணவுப் பொதி வழங்கும் திட்டத்தைமீளஆரம்பிக்கவுள்ளோம். முதியோர், சிறுநீரக நோயாளர், விசேட தேவையுடையோர் ஆகியோருக்கான கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டுள்ளன. பாடசாலை மாணவர்களின் போசாக்கு குறைபாடுகள் கண்டறியப்பட்டு பல்வேறு வேலைத்திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டன. இதுபோன்ற திட்டங்களை நாங்கள் தொடர்ந்தும் முன்னெடுப்போம்.

அத்துடன் கடன் மறுசீரமைப்பு வேலைத்திட்டம் தற்போது வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. அதன்படி, இருதரப்பு கடன் மறுசீரமைப்பு ஒப்பந்தம் குறித்து பாரிஸ் சமவாயத்துடன் இணக்கப்பட்டு எட்டப்பட்டு அது குறித்த அறிவிப்பு விரைவில் விடுக்கப்படவுள்ளது. அவ்வாறு அறிவிக்கப்பட்டால்நாடுவங்குரோத்து நிலையிலிருந்து முழுமையாக மீண்டுவரும். அதனால் சர்வதேச கடன்களைபெறுவதற்கானவாய்ப்பும் உதவிகளும் கிடைப்பதோடு நாட்டுக்குள் பெருமளவான முதலீடுகளும் வந்தடையும்.

நாடு வங்குரோத்து நிலையில் இருந்து விடுபட்டு மீண்டும் இயல்பு நிலைக்குத் திரும்பி கணக்கு வழக்குகளைஆரம்பிக்கவேண்டும். மேலும் புதிய வருமான வழிகளை உருவாக்க வேண்டும். எதிர்வரும் நாட்களில் அது தொடர்பில் விசேட கவனம் செலுத்துவோம். அந்த நோக்கிலான முதன்மை திட்டமாக விவசாய நவீனமயமாக்கல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும்.

தற்போது இலங்கையில் ஒரு ஹெக்டயரில் 4 மெற்றிக்தொன் விளைச்சலையே பெற முடிகிறது. தற்போதுஅதைஇரட்டிப்பாக்கக்கூடிய திட்டத்தை தயாரித்து செயல்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளோம். இந்த ஆண்டு கிராம பகுதிகளில் அந்தத் திட்டங்கள் செயல்படுத்தப்படும்.

சுற்றுலாத்துறையிலும் விசேட கவனம் செலுத்தியுள்ளோம். ஏற்கனவே இலங்கைக்கு வரும் சுற்றுலா பயணிகளின்எண்ணிக்கைஅதிகரித்துள்ளது. கடந்த வருடம் 1,489,000 சுற்றுலா பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். அது முன்னைய ஆண்டை விடவும் இரட்டிப்பாகும். மேலும், 2017 ஆம் ஆண்டில் 25 இலட்சம் சுற்றுலாப் பயணிகள் இந்த நாட்டிற்கு வந்துள்ளனர். அதே அளவானோரை மீண்டும் வரச் செய்வதே எமது பிரதான இலக்காகும்.

அடுத்த ஆண்டுக்குள் இதை மேலும் உயர்த்த வேண்டும். இங்கு வரும் சுற்றுலாப் பயணிகள் ஒரு நாளைக்கு 100 டொலரை செலவிடுகிறார்கள். அவற்றுக்கு மேலதிகமாக, நாளொன்றுக்கு சுமார் 500 டொலரை செலவழிக்கும் உயர்தர சுற்றுலாப் பயணிகளை இலங்கைக்கு வரவழைப்பதற்கான புதியதிட்டங்களைவகுத்துள்ளோம்.

உற்பத்தித் துறை, கட்டுமானத் துறை ஆகிய அனைத்துத் துறைகளிலும் மாற்றத்தை ஏற்படுத்தும் திட்டமிடலையும் அரசாங்கம் கொண்டுள்ளது. பொருளாதார வீழ்ச்சியால் நாம் அனைவரும் பாதிப்புக்களை எதிர்கொண்டிருந்தோம். நீண்டகாலமாக தாமதப்படுத்தப்பட்ட பல சீர்திருத்தங்களை தற்போது நாம் மேற்கொண்டு வருகின்றோம். இது அரசியல் ரீதியாக பாதகமாக இருந்தாலும், நாட்டின் எதிர்காலத்திற்கு நன்மை பயக்கும்.

சில நேரங்களில் எடுக்கப்படும் முடிவுகளின் பிரதிபலன்களை 100சதவீதம் எதிர்பார்க்க முடியாது. ஆனால், எதிர்கால சந்ததியினரும், இளைஞர்யுவதிகளுக்கும்அதனால் பயனடைவார்கள். அதற்காக நாம் இந்தப் பாதையில் பயணிக்க வேண்டியது அவசியம். இந்தப் பொருளாதாரச் சீர்திருத்தங்களை மீளவும் தடுக்க முடியாத வகையில் நாடாளுமன்ற சட்டத்தை நிறைவேற்றிய பின்பே செயற்படுத்துகிறோம். இருப்பினும் அந்த திட்டங்களை முறையாக நிறைவு செய்ய வேண்டுமெனில் நாம்ஒருநாடாகஒன்றுடவேண்டியது அவசியமாகும் என்றார்.

## தனியார்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கள் துஷ்பிரயோகம், ஊழல் மற்றும் பொது விவகாரங்களில் மோசடி ஆகியவற்றை பயனுள்ள மேற்பார்வை மூலம் தடுக்க வேண்டும்.

எவ்வாறாயினும், பௌத்த சங்கத்தின் சுயாட்சியில் அரசநிறுவனங்களைதனியார்மயமாக்குவதால் ஏற்படக்கூடிய தாக்கம் தொடர்பில் நாம் கவலை அடைகின்றோம்.

இத்தகையதனியார்மயமாக்கல் எந்த அளவிற்கு சங்கத்தை அதிகப்படியான அரசாங்க ஒழுங்கு முறைக்கு உட்படுத்தக்கூடும்.

ஏற்கனவேநிதிரீதியாகவும்தேசிய பொருளாதாரத்திற்கு முக்கியமானதாகவும்உள்ளஸ்ரீலங்காடெலிகொம் மற்றும் இலங்கை மின்சார சபை போன்ற அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துவது, எதிர்காலத்தில் குறிப்பிடத்தக்க சமூக, பொருளாதார மற்றும் அரசியல் உறுதியற்ற தன்மையை உருவாக்கும் இலாப அபாயங்களைமட்டுமேவெளிநாட்டு நிறுவனங்களுக்கு வழங்குவதால் ஏற்படும்.

இந்த விடயங்கள் தொடர்பில் ஜனாதிபதி கவனமாக பரிசீலித்து பொது நலனுக்கு குந்தகம் விளைவிக்கும் அல்லது தேசிய பாதுகாப்பு பிரச்சினைகளை ஏற்படுத்தக்கூடிய தீர்மானங்களை எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

அரசாங்க நிறுவனங்களை மறுசீரமைக்க வேண்டியதன் அவசியம் என்பதோடு இது போன்ற சீர்திருத்தங்கள் பொதுமக்களின் நம்பிக்கையைக் கட்டியெழுப்புவதற்கும் நாட்டுக்கு சாதகமான எதிர்காலத்தைப் பாதுகாப்பதற்கும் முக்கியமானவை என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## வன்புணர்வின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெயர் இருக்கும் நிலையில் கிராமத்தில் வேறு ஒரு பெயரில் அவர் நடமாடி வந்துள்ளார்.

சிறுமியின் சடலத்தை யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உடற் கூறாய்வுக்கு உட்படுத்தும்படி பதில் நீதிவான் உத்தரவிட்டிருந்தார். அதன்படி நேற்றுக்காலை10.30மணியளவில் உடற்கூறாய்வு இடம்பெற்றது.

பிரேத பரிசோதனை மேற்கொண்டசட்டவைத்தியஅதிகாரி செல்லத்துரை பிரணவன் குறித்த சிறுமி பாலியல் பலாத்காரத்திற்கு உட்படுத்தப்பட்டுகழுத்தை நெரித்து கொலைசெய்யப்பட்டுள்ளார் என்று தெரிவித்தார்.

உடற்கூறாய்வின் பின்னர் சிறுமியின் உடல் அவரது உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது.



காலைக்கதிர் Kalaikkathir

# மாகாணசபையை முழுதாக அனுபவிப்போரின் பொறுப்பற்ற பேச்சுகள் நாட்டுக்கு நன்மை தரா

## ஈ.பி.டி.பியின் ஊடக பேச்சாளர் சிறீ ரங்கேஸ்வரன் தெரிவிப்பு

தமிழர் உதிரம் சிந்தி பெற்ற மாகாணசபை முறைமையை முழுமையாக அனுபவிக்கும் தென்னிலங்கை, அரசியல்வாதிகள் பொறுப்பற்ற பேச்சுக்களால் மீண்டும் இனங்களுக்கிடையே விரிசலும் நாட்டின் வளர்ச்சியும் வீழ்ச்சிப்பாதைக்கு செல்ல வழிவகுக்கும் என சுட்டிக்காட்டியுள்ள ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் ஊடக பேச்சாளரும் கட்சியின் யாழ்.மாவட்ட உதவி நிர்வாக செயலாளருமான ஐயத்துரை ஸ்ரீரங்கேஸ்வரன் இத்தகைய பொறுப்பற்ற செயற்பாடுகளுக்கு ஈழ மக்கள் ஜனநாயக கட்சி தனது கண்டனத்தையும் தெரிவித்துக்கொள்கின்றது எனத் தெரிவித்துள்ளார்.

யாழ்.ஊடக அமையத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில் -

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்ட பொலிஸ் அதிகாரத்தை 22 ஆவது அரசமைப்பு திருத்தத்தை முன்வைத்து மாகாண சபைகளுக்கு பொலிஸ் அதிகாரங்களை நீக்கவுள்ளதாக பிரித்துரு ஹெல உறுமியவின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான உதய கம்பன்பில தெரிவித்துள்ளார்.

இது அரசினுடைய கருத்தல்ல. தேசிய கொள்கையும் அல்ல. ஒரு தனிப்பட்ட கட்சியினுடைய கருத்தாக இருக்கலாம். ஆயினும் இந்திய இலங்கை ஒப்பந்தத்தினூடாக கிடைக்கப்பெற்ற 13 ஆவது அரசமைப்பின் திருத்தத்தினூடான மாகாண சபை முறைமையை இவ்வாறு எற்கனவே பலவீனப்படுத்த முயற்சிகள் எடுக்கப்பட்டன. இனிமேலும் இவ்வாறு மேற்கொள்ள முயற்சிக்கப்படலாம்.

இதுபோன்று ஏற்கனவே இவ்வாறு பலவினப்படுத்த எடுக்கப்பட்ட முயற்சி ஒன்றின்போது சந்திரிகா அம்மையாருடைய ஆட்சிக்காலத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தென்னிலங்கை நாடாளுமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக இடதுசாரி கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்ளின் 50 இற்கும் மேற்பட்ட கையொப்பங்களை பெற்று சபையில் சமர்ப்பித்து அதனை முறியடித்திருந்தார்.




ஆனாலும் தென்னிலங்கையுடனான தேசிய நல்லிணக்கத்தின் மூலம் இதை தடைதாண்டுவோம். அதற்கு நல்லிணக்கம் ஒருபுறமும் அரசியல் பிரதிநிதித்துவப் பலமும் இந்த இடத்தில் தேவைப்படுகின்றது என்பதை சுட்டிக்காட்டுகின்றோம்.

மேலும் தேசிய நல்லிணக்கத்திற்கு பாதகமான அல்லது தமிழர்களின் அரசியல் அபிலாஷைகளை மலின்படுத்தும் இவ்வாறான பேச்சுக்களை நாம் வன்மையாகக் கண்டிக்கின்றோம்.

இதேநேரம் மாகாணசபைகளுக்கு இருந்த பொலிஸ் மற்றும் காணி அதிகாரங்களை இன்றைய எதிர்க்கட்சி தலைவரான சஜித் பிரேமதாஸவின் தந்தையான ரணசிங்க பிரேமதாஸ தனது ஆட்சிக்காலத்தில் மத்திய அரசின் கீழ் கொண்டுவந்திருந்தார் என்றும் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.





## வவுனியா விபுலானந்தா விளையாட்டு போட்டி

விளையாட்டு மைதானம் இல்லாத போதும் இவ்வருடத்திற்கான விளையாட்டுப் போட்டியை வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் விபுலானந்தா கல்லூரி முதலாவதாக ஆரம்பித்துள்ளது.

வவுனியா, பண்டாரிக்குளம் பகுதியில் அமைந்துள்ள விபுலானந்தா கல்லூரியில் 2000 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி கற்கின்ற போதும் அதற்கான ஒரு நிரந்தர மைதானம் இதுவரை இல்லை. மைதானத்திற்கான நிலம் ஒன்றைக் கொள்வனவு செய்ய நீண்ட நாள்களாகப் பழைய மாணவர்கள், பெற்றோர்கள் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்ற போதும் இது வரை அது கைகூடவில்லை.

இவ்வாறான நிலையில், கல்வி அமைச்சின் சுற்றறிக்கைக்கு அமைவாக மாணவர்களின் இணைப்பாடவிதானச் செயற்பாடுகளில் ஒன்றான விளையாட்டுப் போட்டியை நடத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ள குறித்த பாடசாலை இவ்வாண்டுக்கான இல்லமெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வாக மரதன் ஓட்டப் போட்டியை வெள்ளிக்கிழமை நடத்தியது.

இம் மரதன் ஓட்ட நிகழ்வை பாடசாலையின் முதல்வர் திருமதி மோகனதாஸ் ஆரம்பித்து வைத்தார். பாடசாலை முன்றிலில் ஆரம்பித்த மரதன் ஓட்டம் வைரவபுளியங்குளத்தை அடைந்து, அங்கிருந்து வவுனியா நகர மணிக்கூண்டு கோபுர சந்தியைச் சென்றடைந்து, யாழ் வீதியூடாக சென்று பண்டார வன்னியன் சதுக்கத்தையடைந்து, அங்கிருந்து மன்னார் வீதியூடாக நெளுக்குளம் சந்தியை அடைந்து, மீள வேப்பங்குளம் ஊடாக பாடசாலை முன்றிலில் நிறைவடைந்தது.

இதில் ஆண், பெண் என 54 மாணவர்கள் ஆர்வத்துடன் பங்கு பற்றியிருந்தனர். பல பாடசாலைகளில் மைதான வசதி இருந்தும் இவ்வருடத்துக்கான விளையாட்டு நிகழ்வுகளை இன்னும் ஆரம்பிக்காத நிலையில் மைதானம் இல்லாத விபுலானந்தா கல்லூரி வவுனியா தெற்கு வலயத்தில் முதலாவதாக விளையாட்டுப் போட்டியின் முதல் நிகழ்வான மரதன் ஓட்டத்தை நிறைவு செய்துள்ளமை அனைவரது பாராட்டையும் பெற்றுள்ளது. (05-100)

## அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மீள்சுழற்சி நிலையப் பகுதியில் யானைகள் வருகை அதிகரிப்பு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை புத்தங்கல வீதியிலுள்ள கழிவு மீள்சுழற்சி நிலைய பகுதியில் மலைபோல் குவிந்துள்ள குப்பைகளை உண்ண யானைகள் தினமும் வருகை தருகின்றன.

இவ்வாறு வரும் யானைகள் சில அருகில் உள்ள பொதுமக்களின் சொத்துக்களுக்கும் சேதங்களை விளைவிப்பதால் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

இக்காட்டு யானைகளைக் கட்டுப்படுத்த யானை வேலிகள் அமைப்பதற்கான நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்ட போதிலும் யானைகள் அத்துமீறி வீதிகள், பயிர் நிலங்களை நோக்கி வருகை தருகின்றன. அம்பாறை நகரில் இருந்து குப்பைகள் வாகனங்கள் மூலம் தினமும் கொண்டு வரப்பட்டு கொட்டப்படுகின்றதுடன் மலைபோல் குவிந்துள்ள குறித்த குப்பைகளை யானைகள் தினமும் உண்ண வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் பெருமளவான காட்டு யானைகள் குப்பை மேடுகளைத் தேடி உணவுக்காக வருகின்றன. தாவர உண்ணியான காட்டு யானைகள், குப்பைகள் ,பொலீத்தீன்கள், பிளாஸ்ரிக் பொருள்கள் உள்ளிட்ட கழிவுப் பொருள்களை உட்கொள்வதால் யானைகளின் இறப்பு வீதம் அதிகரித்து வருகின்றது. யானை நாளொன்றுக்கு சுமார் 150 கிலோ உணவை உட்கொள்வதாகவும் 160 லீற்றர் தண்ணீரையும் குடிப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அண்மைக்காலங்களில் யானை - மனித மோதலால் யானைகளும் மனித உயிர்களும் இழக்கின்ற சந்தர்ப்பங்கள் சடுதியாக அதிகரித்துள்ளன. அத்துடன் யானை - மனித மோதலால் அதிகளவான மனித உயிரிழப்புக்கள் இடம்பெறும் நாடுகளில் இரண்டாவதாக இலங்கை காணப்படுகிறது.

யானை - மனித மோதலைக் குறைப்பதற்குப் பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போதும் அவற்றை முறையாக அமுல்படுத்தப்படாமை மற்றும் மேற்பார்வை செய்யப்படாமை காரணமாக யானை - மனித மோதலின் இழப்புக்களைக் குறைப்பது இன்று வரையும் முடியால் உள்ளமை வெளிப்படையாகும்.

இதனால் குறித்த மோதலால் யானைகளும் மனிதர்களும் தொடர்ச்சியாக மரணித்து வருகின்றனர். எனவே, மனிதன் மற்றும் யானைகளைக் காப்பாற்றவும் சொத்துக்களைப் பாதுகாக்கவும் உடனடியாக தேசிய வேலைத்திட்டத்தை முன்னெடுக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும். இவ்வாறு தொடர்ச்சியாக யானை மற்றும் மனித மரணங்கள் நிகழ்ந்து வந்தாலும் அவற்றை நிவர்த்திப்பதற்கு அல்லது குறைப்பதற்கு பல்வேறு வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றமையும் சுட்டிக்காட்டத்தக்கது. (05)

## நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழாவும்

உடுவில் இந்து இளைஞர் மன்றம் நடத்தும் நாவலர் விழாவும் பாலர் பாடசாலை மாணவர்களின் பரிசளிப்பு விழா நிகழ்வும் இன்று (ஞாயிற்றுக்கிழமை) பி.ப 1.30 மணிக்கு மன்றத்தலைவர் தி.தியாகச்சந்திரன் தலைமையில் உடுவில்.மேற்கு பாலர் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பிரதம விருந்தினராக வலிகாமம் கல்வி வலய ஆசிரிய ஆலோசகர் கணேசரத்தினம் ஆதித்தன் சிறப்புவிருந்தினராக அகில இலங்கை சைவப்புலவர் சங்க செயலாளர் பண்டிதர் சைவப்புலவர் செ.த.குமரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளார்கள்.

நாவலர் நினைவுயை சைவப்புலவர் செ.த.குமரன் ஆற்றவுள்ளார்.

மாணவர்களின் கலைநிகழ்வுகளும் பரிசளிப்பு நிகழ்வும் இடம்பெறவுள்ளது. (05)

## ஜேவிபியின் நிலைப்பாட்டை நப்புடன் எதிர்பார்க்கிறோம்

இந்தியத் தரப்பினரைச் சந்தித்து கலந்துரையாடிய ஜேவிபியின் தலைவர் வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் நிலை தொடர்பில் எவ்வாறான கருத்தை கொண்டுள்ளார் என வெளிப்படுத்த வேண்டும்.

இணைந்த வடக்கு கிழக்கு பிரதேசம் தமிழர்களின் தாயக பிரதேசம் தொடர்பில் ஜேவிபி எவ்வாறான கருத்தைக் கொண்டுள்ளது எனப் பல சந்தர்ப்பங்களில் கேள்வி எழுப்பப்பட்டபோதும் அவர்களிடமிருந்து தமிழர் தாயக பிரதேசம் தொடர்பாக எவ்விதமான தெளிவூட்டல்களும் வெளியிடப்படவில்லை.

இணைந்த வடக்கு கிழக்கை நீதிமன்றத்தினூடாக தனித்தனி மாகாணங்களாக பிரிப்பதற்கு ஜேவிபியே முக்கிய காரணமாக செயற்பட்டது. ஆனால் ஜனாதிபதித் தேர்தல் இந்த ஆண்டு நடைபெறலாம் என்ற கருத்து நிலவும் சூழலில் முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஜேவிபி எழுச்சி பெற்று வருவதாக ஊடகமொன்றிற்குக் கூறியுள்ளார்.

ஆனால் தமிழர்களின் அரசியல் உரிமை தொடர்பாக ஜேவிபி எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டுள்ளது என்பதை சரத்பொன்சேகா கூடத் தெரிவிக்க முயலவில்லை.

ஆகவே வடக்கு கிழக்கு தமிழர்களின் அரசியல் தீர்வு தொடர்பாக ஜேவிபியின் நிலைப்பாட்டை நப்புடன் எதிர்பார்க்கின்றோம் என்றும் அவர் மேலும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (05)

## புதிய சாளம்பைக்குளம் மக்களின் முறைப்பாட்டையடுத்து மாநகரசபை கழிவகற்றல் இடத்தை பார்வையிட்ட றிசாத்

*வவுனியா, புதிய சாளம்பைக்குள மக்களின் முறைப்பாட்டையடுத்து வவுனியா மாநகரசபையின் கழிவுகள் கொட்டப்படும் இடத்தை வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தலைவருமான றிசாத் பதியுதீன் பார்வையிட்டார்.*

*வவுனியா மாநகரபை உள்ளிட்ட உள்ளூராட்சி மன்றங்களின் கழிவுகள் வவுனியா, பம்பைமடுப் பகுதியில் நீண்ட காலமாகக் கொட்டப்பட்டு வருகின்றது. இந்நிலையில் குறித்த கழிவுகளால் அதன் அருகில் உள்ள புதிய சாளம்பைக்குளத்தில் வாழும் மக்கள் தாம் வசிக்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகக் குற்றஞ்சாட்டியுள்ளனர்.*

*குறித்த கழிவுகள் காற்று மற்றும் நீர் ஊடாகவும், கால்நடைகள் மூலமாகவும் தமது குடிமனைக்குள் வருவதாகவும் இதனால் நோய் தாக்கம் ஏற்படும் அபாயம் உள்ளதாகவும் புதிய சாளம்பைக்குளம் பகுதிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் றிசாத் பதியுதீனிடம் முறையிட்டிருந்தனர்.*

*இதனையடுத்து, குறித்த பகுதி மக்களுடன் இணைந்து நாடாளுமன்ற உறுப்பினர் கழிவுகள் கொட்டப்படும் இடத்தைப் பார்வையிட்டதுடன், இது தொடர்பில் விரைவில் தீர்வைப் பெற்றுத் தருவதாகவும் தெரிவித்திருந்தார். (05-100)*

காலைக்கதிர் Kalaikkathir

# சமுதாய சீர்திருத்தக் குழு, சிறுவர் கண்காணிப்பு பால்நிலை வன்முறை குறித்த செயற்குழு கூட்டம்

(நூருல் ஹுதா உமர்)

இறக்காமம் பிரதேச சிறுவர்களின் உரிமை, பாதுகாப்பு, அபிவிருத்தி, சிறுவர் நலன் மற்றும் மேம்பாடு மற்றும் பால்நிலை அடிப்படையிலான வன்முறைகள், பெண்கள் எதிர்நோக்கும் துஷ்பிரயோகங்கள், அவர்களின் பாதுகாப்பு, ஆரோக்கியம் என்பவை தொடர்பாக காலாண்டுக்கு ஒரு முறை இக்கூட்டத்தில் ஆராயப்பட்டு வருகிறது.

அந்த வகையில் பிரதேச மட்ட சமுதாய சீர்திருத்தக் குழு, சிறுவர் கண்காணிப்பு மற்றும் பால்நிலை வன்முறை தொடர்பான செயற்குழு கூட்டம் இறக்காமம் உதவி பிரதேச செயலாளர் எம்.ஏ.சி. அஹமட் நஸீல் தலைமையில் இறக்காமம் பிரதேச சபை கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இறக்காமம் பிரதேச செயலக பிரிவில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் குற்றச் செயல்கள் தொடர்பில் அதிகமான வழக்குகள் பதிவு செய்யப்பட்டமையைத் தொடர்ந்து அவை தொடர்பில் சமூக மட்ட விழிப்புணர்வை ஏற்படுத்துமாறு அம்பாறை நீதிமன்ற நீதிபதியின் விசேட உத்தரவையடுத்து மாவட்ட சமுதாய சீர்திருத்த உத்தியோகத்தர் என்.எம். இக்ராம் மற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திருமதி வி.யசோதா ஆகியோரின் ஒருங்கிணைப்பில் இக்கூட்டம் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் பிரதேச சிறுவர்களின் உரிமை மற்றும் பாதுகாப்பு என்பவற்றை உறுதிப்படுத்தும் நோக்கில், பாடசாலை இடைவிலகல், கல்வி ரீதியான பிரச்சினைகள், பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பு, பிரத்தியேக கல்வி நடவடிக்கைகள், சிறுவர்களை மையப்படுத்திய போதைப் பாவனை, இளவயது திருமணம், சிறுவர்களின் சுகாதார மேம்பாடு, விசேட தேவையுடைய சிறுவர்களின் நலனோம்பல் தொடர்பான விடயங்கள் மற்றும் சமுதாய சீர்திருத்தக் குழு, கிராம மட்ட சிறுவர் அபிவிருத்தி குழுவின் 2024 ஆம் ஆண்டு வருடத்திற்கான செயற்பாடுகள் தொடர்பாகக் கலந்துரையாடப்பட்டன.

மேலும், பால்நிலை வன்முறை மற்றும் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பிரதேச மட்டத்தில் தங்கள் அமைப்பு சார்ந்த வேலைத்திட்டங்கள், குடும்ப வன்முறை, பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்கள் எதிர் நோக்கும் சவால்கள் அவற்றைக் குறைப்பதற்கும் தடுப்பதற்குமான நடவடிக்கைகள் போன்ற பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

மேற்படி கூட்டத்திற்கு குவாசி நீதிவான் சட்டத்தரணி எஸ்.எல். பாறூக், பிரதேச சபை செயலாளர் எல்.எம். இர்பான், சுகாதார வைத்திய அதிகாரி திருமதி எம்.என்.எப். றஸ்கா ஆஸ்மி, பொலிஸ் நிலைய நிர்வாக பொறுப்பதிகாரி எம்.வை. ஜௌபர், எச்.பி. யசரட்ன பண்டார, சமுர்த்தி தலைமைப்பீட முகாமையாளர் ஏ.எல். நௌபீர் சமுர்த்தி வங்கி முகாமையாளர் டி. கே. ரஹ்மதுல்லாஹ் மற்றும் சமூக சேவைகள் உத்தியோகத்தர் ஏ. சபீர் ஆகியோரும் கலந்து சிறப்பித்தனர்.

மேலும் சிறுவர் , சமய நிறுவனங்களின் தலைவர்கள், ஜம்இய்யதுல் உலமா சபை, பொதுச் சுகாதார பரிசோதகர், இஸ்லாமிக் ரிலீப், மனித எழுச்சி நிறுவனங்களின் பிரதிநிதிகள், மகளிர் சங்கப் பிரதிநிதிகள், கிராம மட்டத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். இளைஞர் சேவைகள் அதிகாரி ஏ.ஆர். றியாஸ், உளவளத்துணை உத்தியோகத்தர் ஏ.எச்.றகீப், முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆர். முஹம்மட் இம்டாட், பெண்கள் மற்றும் சிறுவர் அபிவிருத்தி பிரிவின் உத்தியோகத்தர்களும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# தாயகக் கரங் கொடுப்போம் செயற்திட்டத்தின் ஊடாக கிழக்கு மாகாண மாணவருக்கு கற்றல் உபகரணங்கள்

தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் மகளீர் அணியால் கட்சியின் கிராமியக் குழு உறுப்பினர்களுடன் இணைந்து கடந்த 5 ஆம் மற்றும் 6 ஆம் மாதங்களில் முன்னெடுத்த ஒருங்கிணைந்த தீர்மானத்திற்கு அமைவாகக் கடந்த கால யுத்தம் மற்றும் அதன் பின் எழுந்த உலகளாவிய கொவிட்தொற்று அதனுடன் இணைந்த பொருளாதார நெருக்கடி, பொருள்களின் விலையேற்றம் போன்ற காரணிகளால் 2024 ஆம் ஆண்டு புதிய வகுப்பில் காலடி எடுத்து வைக்கும் தமது பிள்ளைகளுக்கான கற்றல் உபகரணங்களை கொள்வனவு செய்து வழங்குவதில் சவால்களை எதிர்கொள்ளும் தாய்மார்களுக்கு அவர்களின் பிள்ளை செல்வங்களுக்கான கற்றல் உபகரணங்களைக் கொள்வனவு செய்து வழங்கும் முகமாக அந்தத் தாய்மார்களுடன் தாயாக நின்று கரம் கொடுப்போம் எனும் தொனிப்பொருளில் கிழக்கு மாகாணம் பூராகவும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் குறித்த செயற்திட்டம் முதற்கட்டமாக மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டு அண்மையில் அம்பாறை மாவட்டத்திற்கு விஸ்தரிக்கப்பட்டிருந்த நிலையில் வெள்ளிக் கிழமை திருமலை மாவட்டத்திலும் ஆரம்பிக்கப்பட்டிருந்தது.

அந்தவகையில் தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சியின் மகளீர் அணியின் ஏற்பாட்டிலும் கட்சியின் மகளீர் அணிச்செயலாளர் சுசிகலா அருள்தாஸ் தலைமையில் மூதூர் கல்வி வலையத்திற்குப்பட்ட மாவடிச்சேனை வெருகலம்பதி இந்து மகா வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் வட்டவான் தான்தோன்றீஸ்வரர் வித்தியாலயம், பூமரத்தடிச்சேனை ஸ்ரீசித்தி விநாயகர் வித்தியாலயம், ஈச்சிலம்பற்று சிவானந்தா ஆரம்ப பாடசாலை, வட்டவான் தண்ணிப்பூவல் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் வாழைத்தோட்டம் மீனாட்சி அம்மன் வித்தியாலயத்தில் நடைபெற்ற நிகழ்வில் இலங்கை துறை கனிஷ்ட வித்தியாலயம், உப்பூறல் சிவசக்தி வித்தியாலயம், முத்துச்சேனை வித்தியாலயம், புண்ணையடி நாமகள் வித்தியாலயம், கல்லடி மலை நீலியம்மன் வித்தியாலயம் போன்ற பாடசாலைகளைச் சேர்ந்த மாணவர்களுக்கும் கற்றல் உபகரணங்கள் மற்றும் அப்பியாச கொப்பிகள் போன்றன வழங்கிவைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரும், மாவட்ட அபிவிருத்திக்குழுத் தலைவருமான சிவ.சந்திரகாந்தன் பிரதம அதிதியாக கலந்து கொண்டு கற்றல் உபகரணங்களை வழங்கி வைத்ததுடன், அப் பாடசாலைகளின் வளப்பற்றாகுறைகள், தேவைகள் தொடர்பிலும் கேட்டறிந்து கொண்டதுடன் அவற்றை நிவர்த்தி செய்வதற்கான முனைப்பான நடவடிக்கைகளை முன்னெடுப்பதாகவும் குறிப்பிட்டிருந்தார்.

மேற்படி நிகழ்வில் வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி நலீம், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளரும் கிராமிய வீதிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சரின் இணைப்பு செயலாளருமான பூ.பிரசாந்தன், கோட்டக்கல்வி பணிப்பாளர் தயாபரன்,உதவி கல்வி பணிப்பாளர் ஜவாத், பிரதிக் கல்விப் பணிப்பாளர் அப்பாஸ், தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பிரதம பொருளாளர் ஆ.தேவராஜ், கட்சியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் கு.நளினகாந்தன், கட்சியின் திருகோணமலை மாவட்ட இணைப்பாளர் மா.ரங்கன் மூதூர் தொகுதி அமைப்பாளர் சி.புவனேஷ்வரன், உட்பட பாடசாலைகளின் அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள், கட்சியின் உறுப்பினர்கள் என பலரும் கலந்து கொண்டனர். (05)

# குருமண்வெளியில் ரன்விமன வீடு பயனாளியிடம் நேற்று கையளிப்பு

(வி.ரி.சகாதேவராஜா)

மண்முனை தென் எருவில் பற்று களுவாஞ்சிகுடி பிரதேச செயலகத்தின் குருமண்வெளி -11, மேற்கு கிராம உத்தியோகத்தர் பிரிவில் ரன்விமன வீடு பயனாளியிடம் கையளிக்கப்பட்டது. பிரதேச செயலாளர் திருமதி. சிவப்பிரியா வில்வரத்னம் நேற்று (சனிக்கிழமை) அவ் வீட்டை பயனாளியிடம் கையளித்தார்.

குறைந்த வருமானம் பெறும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை சமூக ரீதியாக மேலுயர்த்துவது மற்றும் வீடற்றவர்களுக்கு வீடு வழங்குவது நோக்கமாகக் கொண்டு 2023 ஆம் ஆண்டு நடைமுறைப்படுத்தப்பட்டது இவ் ரன்விமன வீட்டு வேலைத்திட்டம் ஆகும்.

அதன் கீழ் திருமதி கருணாகரமூர்த்தி ராதிகா அவர்களுக்கு சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திால் ரூபா 750,000/- வழங்கப்பட்டிருந்ததோடு, பயனாளியின் பங்களிப்பாக ரூபா 1700,000/-ரூபாவுமாக மொத்தம் 2450,000/- செலவில் இவ்வீடு நிர்மாணிக்கப்பட்டிருந்தது.

இந் நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்தியகௌரி தரணிதரன், தலைமையக முகாமையாளர் திருமதி புவனேஸ்வரி ஜீவகுமார், கருத்திட்ட முகாமையாளர் திருமதி விமலராணி யோகேந்திரன், எருவில் வங்கி முகாமையாளர் .எஸ். ஆனந்தமோகன், சமூக அபிவிருத்தி உதவியாளர் தெ.உதயசுதன், கிராம சேவை உத்தியோகத்தர் திருமதி நிரோசினி பிரசாந்த, சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர் பே.அச்சுதன், திட்டமிடல் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் திருமதி மதனப்பிரியா சுந்தரலிங்கம், எஸ்.ஜெயகாந்தன், அலுவலக உத்தியோகத்தர்கள், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், சமுதாய அடிப்படை அமைப்பு உறுப்பினர்கள், கிராம அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், ஆலய நிர்வாகிகள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர்.(05)

# கல்முனை ரோயல் வித்தியாலயத்துக்கு போட்டோ கொப்பி இயந்திரம் வழங்கல்





(எம்.என்.எம்.அப்ராஸ்)

சுனாமியால் பாதிக்கப்பட்ட கல்முனை கீறின் பீல்ட் தொடர்மாடி குடியிருப்பு பகுதியில் உள்ள கமு/கமு/ ரோயல் வித்தியாலயத்தின் நீண்ட கால தேவையாக இருந்து வந்த போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் பாடசாலை மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம். அன்சார் அவர்களால் பாடசாலை தேவைப்பாடுகள் குறித்து ஏ.ஆர் மன்சூர் பௌன்டேஷனுக்கு விடுக்கப்பட்ட கோரிக்கைக்கமைய, முன்னாள் வர்த்தக வாணிப துறை அமைச்சரும், குவைத் நாட்டுக்கான முன்னாள் தூதுவருமான மர்ஹூம் கலாநிதி ஏ.ஆர். மன்சூர் அவர்களின் புதல்வியும், ஏ.ஆர். மன்சூர் பௌன்டேஷன் மற்றும் ஆஸ்திரேலிய முஸ்லிம் பெண்கள் கவுன்சிலின் தலைவியும் சட்டதரணியுமான மர்யம் மன்சூர் நளிமுதீனால் ஏ.ஆர்.மன்சூர் பௌன்டேஷன் அமைப்பின் கல்வி மேம்பாட்டுத் திட்டங்களின் கீழ் இவ்வாண்டிற்க்கான (2024)ஆரம்ப நிகழ்வு கல்முனை ரோயல் வித்தியாலயத்தில் இடம் பெற்ற போது பாடசாலைக்கு போட்டோ கொப்பி இயந்திரம் மற்றும் மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் என்பன வழங்கி வைக்கப்பட்டன.

மேலும் பாடசாலை சமூகம் சார்பில் பாடசாலையின் அதிபர் எம்.எச்.எம். அன்சாரால் சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனுக்கு நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன் முன்னாள் அமைச்சர் மர்ஹூம் கலாநிதி ஏ.ஆர்.மன்சூருக்கு விசேட துஆப்பிராத்தனையும் இடம்பெற்றது. அத்துடன் மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

பாடசாலையின் ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திக்குழு உறுப்பினர்கள், நலன் விரும்பிகள், மாணவர்கள் மற்றும் பௌன்டேசனின் உறுப்பினர்கள் ஆகியோர் இதன் போது கலந்து கொண்டனர். அம்பாறை மாவட்டத்தில் ஏ.ஆர்.மன்சூர் பௌன்டேஷன் அமைப்பு குறிப்பாக பாடசாலை மாணவர்களின் கல்வி மேம்பாடு மற்றும் பொது மக்கள் நலன் சார் உதவிகளை மேற்க்கொண்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (05)




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 18.02.2024இல் வெளியிடப்பெற்றது.